# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்.

நீதிமொழிகள் 10:22



THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

May - June 2025
Volume : 65

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 3

## MABC பட்டமளிப்பு விழா–சென்னை










## ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE பட்டமளிப்பு விழா–புதுச்சேரி











## சுங்குவார்சத்திரம் ஏஜி சபை ஆலய பிரதிஷ்டை





ஆசிரியரிடமிருந்து........!



## வேதத்தின் வழியில் பொருளாதார ஆசீர்வாதம்

**(நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து)**

நீதிமொழிகள் புத்தகம் நாம் இந்த பூமியில் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான பல ஆலோசனைகளை நமக்கு தருகிறது. இந்த பூமியில் வாழ்ந்த மிகச் சிறந்த செல்வந்தர்களில் ஒருவர் சாலமோன். தேவ ஆவியானவரின் உதவியோடு பொருளாதார ஆசீர்வாதங்களுக்கான வழிகளையும் நீதிமொழிகள் புத்தகத்தில் எழுதியுள்ளார். அவைகளை நாம் கைக்கொள்ளும்போது தேவன் நம்மை பொருளாதாரத்தில் தழைக்கச் செய்வார்.

### 1. தேவனை பணத்தினால் கனம்பண்ணுங்கள் (SERVE and honor God with your finances)

"உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்" என்று நீதிமொழிகள் 3:9,10 வசனங்கள் கூறுகிறது. தேவன் நம்முடைய தேவைகள் அனைத்தையும் சந்திக்க வாக்குப்பண்ணியுள்ளார். ஆனால் நாம் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். இங்கு நம்முடைய பொருளாலும், முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ண வேண்டுமென்று வேதம் கூறுகின்றது. நாம் எப்படி நம்முடைய பொருளால் தேவனை கனம்பண்ண முடியும்?

முதலாவது நம்முடைய தசமபாகங்களை ஆலயத்திற்கு கொண்டுவந்து தேவனுக்கு கொடுக்க வேண்டும் (மல்கியா 3:10; லேவி.27:30). தேவ ராஜ்யத்தின் பணிக்காக உற்சாகமாக நமது காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நம்முடைய பணம் அனைத்தும் தேவன் நமக்கு தந்தது என்ற உணர்வோடு நல்ல உக்கிராணக்காரர்களாக உண்மையோடு பணத்தைக் கையாள வேண்டும். நாம் தேவனுக்கு பொருளாதாரத்தில் முதலிடம் கொடுக்கும்போதுதான் அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணர் என்பதை நம் வாழ்வில் வெளிப்படுத்துகிறோம். அவ்வண்ணம் செய்யும்போது கர்த்தர் நமக்காக வானத்தின் பலகணிகளை திறந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

### 2. கடினமாக வேலை செய்யுங்கள் (STRAIN every nerve)

'சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்' என்று நீதிமொழிகள் 10:4 கூறுகிறது. சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமா புஷ்டியாகும்

என்று நீதிமொழிகள் 13:4 கூறுகிறது. நம்முடைய வாழ்க்கையில் அறிவு, திறமைகள் போன்றவைகள் இருந்தாலும் நாம் ஜாக்கிரதையோடும், சுறுசுறுப்பாகவும், கடினமாகவும் உழைக்காவிட்டால் பொருளாதார ஆசீர்வாதத்தை பெற முடியாது. சோம்பேறியை தரித்திரம்தான் தேடிவரும் என்று வேதம் கூறுகிறது (நீதி.6:9-11; 18:9; 19:15; 20:4, 13; 21:25; 22:13; 24:30-34). ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும் (யாத்.34:21) என்று வேதம் கூறுகிறது. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது என்று பவுல் கட்டளையிடுகிறார் (2 தெச.3:10). ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார் என்று வேதம் கூறுகிறது (ஆதி.26:12). எந்த ஒரு வேலையையும் அற்பமாக எண்ணாமல் கடினமாக உழைக்க வேண்டும். அதேசமயம், வேலைக்கு அடிமையாக மாறிவிடக்கூடாது (workaholic). நமது சரீர. ஆவிக்குரிய, மனநிலை ஆரோக்கியத்திற்கு போதிய ஓய்வும் இளைப்பாறுதலும் அவசியம் என்று வேதம் போதிக்கிறது.

கடினமாக மட்டுமல்லாமல் நேர்மையாகவும் உழைக்க வேண்டும். பொய் சொல்லி பணம் சம்பாதித்தல் (நீதி.19:22; 26:6; 19:1), நேர்மையற்ற முறைகளை கடைபிடித்தல் (நீதி.20:10;13:11), திருட்டு செயல்கள் ஆகியவை கிறிஸ்தவர்களுக்கு உகந்ததல்ல. அவைகளை கர்த்தர் வெறுக்கிறார். செல்வத்தை பார்க்கிலும் நற்கீர்த்தி மிகவும் முக்கியம் (நீதி.22:1).

## 3. சரியாகத் திட்டமிட்டு பொருளாதாரத்தை நிர்வாகம் செய்யுங்கள் (SKETCH out a plan)

நம்முடைய வருமானத்தைத் திட்டமிட்டு செலவிட வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. “வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி. வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டைக் கட்டு“ என்று நீதிமொழிகள் 24:27 கூறுகிறது. “ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் (ஆங்கிலத்தில் Careful planning of the diligent) செல்வத்துக்கு ஏதுவாகும்” என்று நீதிமொழிகள் 21:5-ல் வாசிக்கிறோம். நாம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய, நம்முடைய வருமானத்திற்குள் செலவு செய்வது மிகவும் அவசியம். திருமணமான ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கைத் துணையோடு உட்கார்ந்து வரவு-செலவை திட்டமிட வேண்டும். உணவு, உடை, பிள்ளைகளின் படிப்பு, பொழுதுபோக்கு, போக்குவரத்து, வீட்டு வாடகை, சேமிப்பு ஆகியவற்றை வருமானத்திற்குள் திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். நாம் திட்டமிட தவறினால் தோல்வியடைய திட்டமிடுகிறோம் (If we fail to plan, we plan to fail) என்ற சிறந்த ஒரு கூற்று உண்டு.

நாம் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்கு பார்க்க வேண்டும் என்று இயேசு கூறினார் (லூக்கா 14:30). மேலும் தேவன் நமக்குக் கொடுத்த வருமானத்திற்காக நன்றி செலுத்தி மனரம்மியத்தோடு வாழவேண்டும். மனரம்மியம் நித்தியவிருந்து என்று நீதிமொழிகள் 15:15 கூறுகிறது.

## 4. எதிர்கால மற்றும் எதிர்பாராத தேவைகளுக்காக சேமிக்க பழகுங்கள் (SAVE for the future)

‘மூடன் தன் வருமானத்தை சேமிக்காமல் அனைத்தையும் செலவழித்துப் போடுகிறான்’ (நீதிமொழிகள் 21:20). ஆனால் ஞானமுள்ளவனோ எறும்பைப்போல எதிர்காலத்திற்காக சேர்த்து வைக்கிறான் (நீதி.6:6-8) என்று வேதம் கூறுகிறது. நமது வருமானத்தில் 10% தசமபாகம். 10% சேமிப்பு, 80% மற்ற செலவுகளுக்காக என்று திட்டமிடுவது நன்மைகளைக் கொண்டுவரும். எதிர்கால தேவைக்காகவும், எதிர்பாராத தேவைக்காகவும் சேமிப்பு அவசியம். யோசேப்பு பரிபூரணமுள்ள ஏழு

வருஷங்களில் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை சேமித்து வைத்தான். அது பிற்காலத்தில் ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வந்தது (ஆதி. 41:34-36).

ஜப்பானியர்கள் வருமானத்தில் 25% சேமிக்கிறார்கள். ஐரோப்பியர்கள் 15-20% சேமிக்கிறார்கள். ஆனால் அமெரிக்கர்கள் வருமானத்திற்கு அதிகமாக 1% செலவழிக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது. நாம் எப்படி? சேமிக்க பழகுங்கள்.

## 5. ஏழைகளுக்கு இரங்குங்கள் (SUPPORT the needy)

'உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்' என்று நீதிமொழிகள் 11:25 கூறுகிறது. நீதிமொழிகள் 28:27ல் தரித்திரனுக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் என்று வேதம் கூறுகிறது. மேலும் ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் என்றும், ஏழையின் கூக்குலுக்கு தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டு கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான் என்றும் வேதம் கூறுகிறது (நீதிமொழிகள் 19:17; 21:13). இந்த வசனங்கள் நாம் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. குறிப்பாக திருச்சபைகளிலுள்ள ஏழை மக்களுக்கு உதவி செய்யுங்கள். 'உன்னிலுள்ள ஏழைச் சகோதரனுக்கு நீ உதவி செய்யும்போது கர்த்தர் நீ கையிட்டு செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்' என்று வேதம் கூறுகிறது (உபா.15:7-10). விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யக்கடவோம் என்று பவுல் கூறுகிறார் (கலா.6:10). ஆதித்திருச்சபையைப் போல் நாமும் தரித்திரரை நினைத்துக் கொள்ள ஜாக்கிரதையாக இருக்கும்போது தேவன் நம்மேல் பிரியமாயிருப்பார். நம்முடைய ஆசீர்வாதத்தை பெருகச் செய்வார். வர்த்திக்கச் செய்வார் (கலாத்தியர் 2:10; 2 கொரி. 9:7-10).

## 6. யூகித்து முதலீடு செய்வதை விட்டுவிடுங்கள் (STEER CLEAR of speculative investments)

ஒரு காரியத்தில் நிச்சயமில்லாத பட்சத்தில் யூகித்து துணிந்து முதலீடு செய்வது ஆபத்தையும் பொருளாதார நஷ்டத்தையும் கொண்டுவரும்.

### கடன் படாதிருங்கள் (Don't go into debt)

கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை என்று நீதிமொழிகள் 22:7 கூறுகிறது. நீங்கள் ஏற்கனவே கடன்பட்டிருப்பீர்களானால் அதை அடைக்க முயற்சி எடுங்கள் (சங்கீதம் 37:21).

### கையடித்து கொடுத்துப் பிணைப்படாதிருங்கள் (Avoid Co-Signing)

கையடித்து உடன்பட்டு, கடனுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாகாதே, செலுத்த உனக்கு ஒன்றுமில்லாதிருந்தால் நீ படுத்திருக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக்கொள்ளவேண்டியதாகுமே என்று வேதம் எச்சரிக்கிறது (நீதி. 22:26, 27:17:18).

### 'தீவிரமாய் ஐசுவரியவானாகும் முயற்சியில் ஈடுபடாதிருங்கள் (Avoid get-rich-quick schemes)

'ஐசுவரியவானாக தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்கு தப்பான். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி.28:20) என்றும், 'வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம். கைப்பாடாய்ச்

சேர்க்கிறவனே விருத்தியடைவான்' (நீதி.13:11) என்று வேதம் கூறுகிறது. சூதாட்டம், பந்தயம்கட்டுதல், லாட்டரி போன்றவற்றில் விசுவாசிகள் ஈடுபடக்கூடாது. தீவிரமாக பணக்காரனாக வேண்டும் என்று தவறான வழிகளை முயற்சிக்காதீர்கள். உழைத்து முன்னேற பிரயாசப்படுங்கள். நீதிமொழிகள் 12:11; 23:4,5; 28:22 ஆகிய வசனங்களை வாசியுங்கள். இன்று அநேக பண மோசடிகள் சமூக வலைதளங்கள் மூலம் நடைபெற்று கொண்டிருக்கிறது. மிகவும் கவனமாயிருங்கள். இல்லாவிடில் ஏமாந்து நஷ்டப்படுவீர்கள்.

## 7. வீண் செலவை தவிர்த்திடுங்கள்
## (STOP Wasteful Spending)

“வேண்டிய செல்வம் ஞானவானுடைய வீட்டில் உண்டு. மூடனோ அதை செலவழித்து போடுகிறான்” (நீதி.21:20). பொருளாதாரக் குறைச்சலுக்கான காரணங்களில் ஒன்று வீண் செலவு செய்தல். அவசியமற்ற, உபயோகமில்லாத, தரமற்ற பொருட்களை தேவையின்றி வாங்க முயற்சிக்காதிருங்கள். பணத்தை ஒரு காரியத்திற்காக செலவழிக்கும் முன் ஜெபித்து, இது அவசியம் தானா? பிரயோஜனமாயிருக்குமா? கிறிஸ்துவ அறநெறியை பிரதிபலிக்குமா? வீண் செலவைக் கொண்டுவருமா? என்று குடும்பத்துடன் யோசித்து, செலவிடும்போது வீண் செலவைத் தவிர்க்க முடியும்.

அடிக்கடி ஹோட்டலில் சாப்பிடுவது, விளம்பரங்களைப் பார்த்து யோசிக்காமல் பொருள்களை, ஆடைகளை வாங்குவது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். எதையும் மற்றவர்களை பிரியப்படுத்தும் நோக்கத்துடன் வாங்காதீர்கள், செய்யாதீர்கள். நீங்கள் செலவுபண்ணும் ஒவ்வொரு காரியமும் தேவனுக்கு பிரியமானதாயிருக்கட்டும். தேவபிள்ளைகள் ஆடம்பரங்களை தவிர்க்க வேண்டும். கஞ்சத்தனமாக இருக்கக்கூடாது, ஆனால் சிக்கனமாக இருக்க பழக வேண்டும். இவைகள் பொருளாதார ஆசீர்வாதத்திற்கு வழிவகுக்கும்.

## 8. தேவனிடம் ஜெபியுங்கள்
## (SEEK God in Prayer)

இறுதியாக பொருளாதார ஆசீர்வாதத்திற்காக தேவனை நோக்கி ஜெபியுங்கள். தேவன் நமக்கு ஞானமும், பெலனும் தந்து நம்முடைய கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதித்து, வீண் செலவுகளுக்கு விலக்கி நம்மை காத்துக்கொள்ளாத பட்சத்தில் நாம் பொருளாதார ஆசீர்வாதம் பெற முடியாது. “கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்“ (நீதி.10:22) என்றும் கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் (நீதி.28:25) என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது. கர்த்தர் ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவர் (1சாமு.2:7). ஐசுவரியம் தேவனாலே வருகிறது (1 நாளா.29:12). ஆகவே நாம் ஜெபத்தில் தேவனை சார்ந்திருந்து, அவரை நம்பி, முயற்சி செய்யும்போது தேவன் நமக்கு ஐசுவரியத்தை சம்பாதிப்பதற்கான ஞானத்தையும் பெலனையும் வாய்ப்புகளையும் அளிக்கிறார் (உபா.8:18; நீதி.22:4).

அன்பான தேவ ஜனமே, நம்மை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம். நாம் மேற்கூறிய வேத ஆலோசனைகளின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது, தேவன் நம்முடைய பொருளாதாரத்தை ஆசீர்வதிப்பார்! விருத்தியடையச் செய்வார்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி

**இனி நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள்** (பாகம் -3) ...தொடர்ச்சி

இதுவரையிலும் ஏற்கனவே நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்களையும், நிறைவேறிக்கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்களையும் பார்த்தோம். இந்தப் பகுதியில் இனி நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களைப் பார்ப்போம். இவை குறுகிய கால அளவிற்குள்ளாகவே நிறைவேறிவிடக் கூடியவை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

**1. மூன்றாம் உலக மகா யுத்தம்**

முதலாம் உலக மகாயுத்தம் 1914 ஆகஸ்ட் 4ல் தொடங்கி, 1918 நவம்பர் 11ம் தேதி 11 மணிக்கு முடிந்தது. 33 நாடுகள் இதில் பங்குபெற்றன. அன்றைய நாட்களில் 33 நாடுகள் என்பது பெரிய எண்ணிக்கை. எனவே இது உலக மகாயுத்தம் என்று அழைக்கப்பட்டது. 4 கோடி மக்கள் மாண்டனர். ஜெர்மனிக்கும் - இங்கிலாந்திற்கும் இடையே ஆரம்பித்த யுத்தம் இது.

2ம் உலக மகா யுத்தம் 1939 செப்டம்பர் 3ல் ஆரம்பித்து, 1945 செப்டம்பர் 2ம் தேதியுடன் முடிந்தது. 61 நாடுகள் இதில் ஈடுபட்டன. உயிரிழந்தோர் 5.48 கோடி மக்கள். இதில் 103 கோடிப் பேர் சிறுகுழந்தைகள். ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி நாடுகளுக்கும், இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா நாடுகளின் கூட்டணிக்கும் ஏற்பட்ட யுத்தமிது.

இந்த கடைசி நாட்களில் மூன்றாம் உலகப்போர் ஒன்று நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

**மூன்றாம் உலக மகா யுத்தம்:**

இது ரஷ்யாவிற்கும் இஸ்ரவேலுக்கும் இடையே நடைபெறும் யுத்தமாக இருக்கும் என்று எசேக்கியேல் 38,39 அதிகாரங்கள் அடிப்படையில் கூறப்படுகிறது.

**மூன்றாம் உலக மகாயுத்தம் வர குறிப்பாக மூன்று காரணங்கள் இருக்கும்.**

**அ) எருசலேமுக்காக இந்த யுத்தம் இருக்கும்**

எருசலேமை சர்வதேச பிரதேசமாக்குவது என்ற ஒரு திட்டம் இருக்கிறது. யோவேல் 3:1,2 வசனங்களில் என் தேசத்தை பங்கிட்டுக் கொண்டதினிமித்தம் அவர்களோடே வழக்காடுவேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

**இஸ்ரவேல் மூன்று தடவை பிரிக்கப்பட்டது**

**1) முதல் உலக மகாயுத்தம் முடிந்தவுடன் 1918ல், பாலஸ்தீனா 3 பகுதியாக பிரிக்கப்பட்டது.**

i) ஒரு பகுதி அரேபியருக்கு.

ii) மற்றொன்று ஜோர்டான் நாட்டுடன் இணைக்கும் பழைய எருசலேம் பகுதி.

iii) மேற்குப் பகுதி யூதருக்கு என்று பிரிக்கப்பட்டது. ஆனால் இது முழுமையாக நிறைவேறவில்லை.

### 2) ஐக்கிய நாடு சபையின் 181 எண் தீர்மானம்

1947 நவம்பர் 29ல் ஐ.நா. சபை 181 எண் தீர்மானத்தை நிறைவேற்றிற்று. மேற்கு பாலஸ்தீனாவிலுள்ள எருசலேம் பட்டணமும் சுற்றியுள்ள கிராமங்களும், பட்டணங்களும் (பெத்லகேம் உட்பட) சர்வதேச பிரதேசமாக இருக்கும் (Corpus separator) இந்த தீர்மானத்தை ஆதரித்து 33 நாடுகளும், எதிர்த்து 13 நாடுகளும் ஓட்டளித்தன. 10 நாடுகள் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பாலஸ்தீனியரும், அரேபியரும் இந்த தீர்மானத்தை எதிர்த்தனர். யூதருக்கு எந்தப் பகுதியும் கொடுக்கப்படக் கூடாது என்பதே அவர்கள் வாதம்.

### 3) 1948 மே 14

அரேபியருக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில், பாலஸ்தீனா என்ற நாட்டை நிறுவ அரேபியரும், பாலஸ்தீனியரும் மறுத்துவிட்டனர். ஆனால் யூதர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை இஸ்ரேல் நாடு என்று பிரகடனப்படுத்தினர். அரேபியர் உடனே யூதர்களுடன் சண்டையிட்டனர். பாலஸ்தீனியருக்குக் கொடுக்கப்பட்ட மேற்குக்கரை பகுதியை பாலஸ்தீனியர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால் அந்தப் பகுதி ஜோர்டானுடன் இணைக்கப்பட்டது. ஐ.நா சபை எருசலேமில் மேற்குப் பகுதியை இஸ்ரவேலருக்கும் தேவாலயம் இருந்த இடத்தை ஜோர்டானுக்கும் பிரித்துக் கொடுத்தது.

1967ல் நடந்த 6 நாள் யுத்தத்தில் பழைய எருசலேம் இஸ்ரவேல் வசமாயிற்று. முழுப் பட்டணமும் இஸ்ரவேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்து இஸ்ரவேலின் தலைநகரமாக விளங்குகிறது.

1948ல் ஐ.நா பிரித்த விதத்தை ஏற்றுக்கொள்ளாத பாலஸ்தீனியர் 1999ல் ஐ.நா தீர்மானம் 181-ஐ அமல்படுத்த வற்புறுத்தினர். கிழக்கு எருசலேம் பாலஸ்தீனியர்களின் தலைநகரமாக அறிவிக்க வேண்டும் என்று குரல் எழுப்பினர். ஆனால் இதை இஸ்ரவேல் நாட்டிலுள்ள அத்தனை கட்சிகளும் எதிர்த்தன.

"யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுங்கள், பராக்கிரமசாலிகள் எழும்புங்கள்,... உங்கள் மண்வெட்டிகளை பட்டயங்களாக... அடியுங்கள்" (யோவேல் 3:9,10).

எனவே மூன்றாம் உலக மகா யுத்தம் எருசலேமுக்காக இருக்கும்.

### ஆ. உலக நாடுகளை கட்டுப்படுத்தி அந்தி கிறிஸ்துவின் ஆட்சி வர இந்த யுத்தம் நடக்கும்

புதிய உலக ஆளுகைக்கு ஐரோப்பிய சங்க நாடுகள் ஆதரவு கொடுக்கும். இதன் தலைவனாக இருக்கப்போகும் அந்திக்கிறிஸ்து (மிருகம்) என்ற அரசியல் நிபுணன் முழு உலகையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர இந்த யுத்தம் உதவி செய்யும்.

### இ. உலக ஜனத்தொகையை குறைக்க இந்த யுத்தம் நடக்கும்

புதிய உலக கொள்கையாளர் சொல்வது என்னவென்றால் (New World Order) இந்த உலகத்தில் தேவைக்கு மிஞ்சின ஜனப்பெருக்கம் வந்துவிட்டது. உணவு, தண்ணீர், சக்தி, போதிய அளவு இல்லை. கொலை, குற்றங்கள், ஏழ்மை நிலை, சூழ்நிலை சீர்கேடு, யுத்தங்கள், வியாதிகள், கடன்கள் பெருகிவிட்டன. இதற்கெல்லாம் மக்கள் பெருக்கம் தான் காரணம். எனவே ஜனத்தொகையை குறைக்க குடும்பக்கட்டுப்பாடு, கருச்சிதைவு, தேவையற்ற கருத்தரிப்பு தடுப்பு அதிகமாக அமல்படுத்தப்பட வேண்டும். யுத்தங்களை ஊக்குவித்து மக்கள் அழிவிற்கு வழி அமைக்க வேண்டும். இதன் மூலமே மக்கள் தொகை குறையும்.

**ராபர்ட் மெக்நாமரா (Robert Menamara)**

இவர் உலக வங்கியின் முன்னாள் தலைவர், இவர் சொன்னது: "மக்கள் எண்ணிக்கையை குறைக்க, 1) குடும்பக் கட்டுப்பாடு, 2) யுத்தம் இவை மூலமாக வழி ஏற்படும்".

**ரிச்சர்ட் ஆட்டிங்கர் (Richard Ottinger)**

ஜனநாயக காங்கிரஸ்மென்-நியூயார்க்கில் ஓர் நேர்காணலில் கூறியது: "ஜனப்பெருக்கம் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் கொடுக்கிறது. உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது. யார் வாழ வேண்டும், யார் சாக வேண்டும் என்று கடவுள் போல நாம் தீர்மானம் எடுத்து, ஏழை நாடுகளுக்கு உணவு வழங்க வேண்டும். எல்லாருக்கும் நம்மால் உணவு கொடுக்க முடியாது. மக்கள் குறைப்பு மிக அவசியமானது"

**வில்லியம் பேடோக் (William Paddock)**

3 நிர்வாக சங்கங்களுக்கு ஆலோசகர் சொன்னது, "தொடர்வான கலகமும், சண்டையும் நடப்பது மக்கள் குறைப்பிற்கு மிக அவசியம்".

**ஹார்லன் கிளீவ்லேண்ட் (Harlan Cleveland)**

ஒரு ஆய்வுக் குழுவின் தலைவர் சொன்னது, "பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடுகளால் பிரச்சனைகள் உருவாகின்றன. இந்த நாடுகளில் மக்கள் குறைப்பிற்கு வழியில்லை. உள்நாட்டு குழப்பங்களும், கொலைகளும், தீவிரவாதங்களும், தொடர்ந்தால்தான் மக்கள் குறைவார்கள்".

**விஞ்ஞானிகள் சொல்வது:**

பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் தொடர்ந்தால்தான் தேவையற்ற மக்கள் கூட்டம் அழிந்து, தேசங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று பல விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உலகம் எவ்வளவு பயங்கர தத்துவத்தில் போகிறதென்று தெரிகிறதா?

**எசேக்கியேல் 38,39 அதிகாரங்களைப் பார்ப்போம்:**

38:1 மேசேக், தூபால் ஜாதிகளின் தலைமை அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு விரோதமாக தீர்க்கத்தரிசனம் உரை

**கோகு:** இவன் அதிபதி. வெளிப்படுத்தல் 20:8லும் இந்தப் பெயர் வருகிறது.

**மாகோகு:** ஆதியாகமம் 10:2லும், 1 நாளாகமம் 1:5லும் யாப்பேத்தின் மகன் மாகோகு என்று வருகிறது.

நோவாவின் மகனான யாப்பேத்தின் குமாரர் மாகோகு, தூபால், மேசேக்கு என்று கூறப்பட்டுள்ளது. மாகோகு என்பது கோகின் நாடு என்று பொருள் கொள்ளலாம்.

சில மொழிபெயர்ப்புக்களில் "ரோஸ்" அதிபதி *(Prince of Rosh)* என்று வருகிறது. தமிழில் இந்த வார்த்தை இல்லை. ரோஸ் என்பது ரஷ்யாவைக் குறிக்கும் என்று பலர் விளக்கமளித்துள்ளனர்.

யாப்பேத்தின் குமாரனான மேசேக்கு தான் குடியேறிய தீவுக்கு "மேசேக்" என்று பெயரிட்டான் என்றும், அது மாசாக்கே என்றும் அழைக்கப்பட்டது. அதுவே இப்போதுள்ள "மாங்கோ" என்ற ரஷ்ய தலைநகரை குறிக்கிறது என சிலர் விளக்கம் அளித்துள்ளனர். "கோகு" என்பது ஞான அர்த்தமாய், "தேவனுக்கு விரோதியான ஒருவன்" என்று பொருள் கொள்ளலாம்.

- தொடரும்



# ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கர்த்தருக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம்மை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று வேதவாக்கியம் கூறுகின்றது (எண்.24:1). மாத்திரமல்ல, நம்மை ஆசீர்வதிக்கிறவர் களையும் அவர் ஆசீர்வதிக்கிறார், எத்தனை மகிழ்ச்சியான செய்தி. சிருஷ்டிகரான கர்த்தர், மனிதனை உண்டாக்கினபோது பூமியை அவனுக்குக் கீழ்ப்படுத்தி, சகலவற்றையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி.1:28). தனிப்பட்ட நபர்களையும், குடும்பங்களையும், பிள்ளைகளையும் அவர் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்றும் அதைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டுமென்றும் இவ்விதழில் பார்ப்போம்.

### ஆசீர்வதிக்கப்படும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

பலிபீடத்தை உண்டாக்கி பலிகளை செலுத்துவாயாக, நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்று தேவன் கூறுகிறார் (யாத்.20:24). ஆபிரகாம், தான் செல்லும் இடங்களில் எல்லாம் பலிபீடத்தை உண்டாக்கிக் கர்த்தரைத் தொழுது கொண்டான். அப்பொழுது அவர், “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் என்றும் உன்னை ஆசீர்வதிப்பேன், நீ ஆசீர்வாதமாக இருப்பாய், பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்றும் அவனை ஆசீர்வதிக்கிறார் (ஆதி.1:28). நாமும் தேவனை ஆராதித்து தொழுதுகொள்ளும்போது நம்மையும் ஆசீர்வதிப்பார். அப்பொழுது நாம் ஆசீர்வாதமாக இருப்பது மட்டுமல்லாமல், நம் மூலம் நம் சந்ததிகளும், மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக நாம் மாறுவோம். வெள்ளம் வந்து முழு உலகமும் அழிந்த பின்பு, நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை கட்டி தகன பலியிட்டான். கர்த்தர் அதை சுகந்த வாசனையாக முகர்ந்தார். பின்பு தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்தார் (ஆதி.8:19-22;1:9). பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் எல்லாம் பலிபீடங்களைக் கட்டி, அவைகளில் பலிகளைச் செலுத்தி , தேவனைத் தொழுது கொண்டார்கள். அப்பொழுதெல்லாம் தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம். நாமும், ஜெப பலிபீடம் கட்டி, ஸ்தோத்திர பலியிட்டு, கர்த்தரைத் தொழுது கொள்ளும்போது ஆண்டவர் நம் ஸ்தோத்திரங்களையும், துதிகளையும் சுகந்த வாசனையாக முகர்ந்து, நம்மை ஆசீர்வதிக்கிறவராயிருக்கிறார். எந்த சூழ்நிலையிலும் முறுமுறுக்காமல், தேவனுக்கு நன்றி செலுத்தி அவரைத் துதிக்கும்போது, அதை அவர் சுகந்த வாசனையாக முகர்கிறார். அது அவருக்குப் பிரியமான ஒன்றாக, அவரை மகிழ்விக்கிற ஒன்றாக காணப்படுகின்றது. நாமும் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

### குடும்ப ஆசீர்வாதங்கள்

குடும்பங்கள் எப்படி ஆசீர்வதிக்கப்படுகிறது என்பதை எண்.24:5-9-ல் உள்ள வசனங்களிலிருந்து பார்ப்போம். நம் வீடுகள், எப்படிப் பட்டவைகளாயிருந்தாலும், ஆண்டவருடைய பார்வையில் அவைகள் அழகானவைகளாக இருக்கின்றன. தேவன் நம் வீட்டில் உலாவி வரவேண்டுமென்றால், நம் வீட்டில் தேவன் விரும்பும் பரிசுத்தமும், சுத்தமும் வேண்டும். பரிசுத்தமில்லாத இடத்தில் எப்படி தேவனால் இருக்க முடியாதோ, அப்படியே சுத்தமில்லாத இடத்திலும் அவர் பிரசன்னம் இருக்காது. நாம் பார்க்கும், கேட்கும் காரியங்கள் தேவனுக்குப் பிரியமாக இருக்கின்றனவா? நம் உறவுகள் எப்படியிருக்கின்றன? நம்முடைய சத்தம் வீதிகளில் கேட்கிறதா? நம் வீடு தேவனுக்கு

முன்பாக அழகான வீடாக இருக்கும்படி சரிசெய்வோம். அப்போது, பரவிப்போகிற ஆறுகளைப் போல சமாதானம் நம் வீடுகளில் நதியாய்ப் பாயும். நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போல நாம் செழுமையாக இருப்போம். சந்தன மரங்களைப் போல வாசனையுள்ளவர்களாகவும், கேதுரு மரங்களைப் போல பலம் வாய்ந்தவர்களாகவும் இருப்போம். அதினதின் காலங்களில் எல்லாம் நேர்த்தியாய் நடக்கும். கர்த்தர் நம்மை மேன்மையடையச் செய்வார். காண்டாமிருகத்துக்கொத்த பெலன் நமக்கு கிடைக்கும். நம்மை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (எண்.4:5-9). ஆண்டவர் நம் வீட்டைப் பலப்படுத்தி, பாதுகாத்து, நம் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார். நம்மைச் சுற்றிலும் சமாதானத்தைக் கட்டளையிடுவார். சிறந்த உணவளித்து நம்மைத் திருப்தியாக்குவார் (சங்.147:13,14). நம்முடைய குமாரர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாகவும், திடகாத்திரமானவர்களாகவும், குமாரத்திகள் நேர்த்தியானவர்களாகவும் வளருவார்கள். நம் வீட்டில் எல்லா பொருட்களும் நிரம்பியிருக்கும். பற்றாக்குறை என்பது இருக்காது. நம் தொழில், வியாபாரம், வேலை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும் இருக்காது. இத்தனை சீரையும் பெற்று, நாம் பாக்கியமுள்ளவர்களாக இருப்போம் (சங். 144:12-15).

சகோதரர் ஒருமனதுடன் வாசம் பண்ணுவது எத்தனை நன்மையான காரியம். அது தேவனுக்குப் பிரியமானதும் கூட. நாம், சமாதானமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் என்று என்னப்படுவார்கள். தேவனுடைய பிள்ளைகளாக இருக்க விரும்பும் நாம் சகோதரருடன் சமாதானமாக இருக்க நாடுவோம். அப்படி சமாதானத்துடன் கூடி வாழும்போது அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார் (சங்.133). கர்த்தருடைய வாக்கை நன்றாய்க் கேட்டு, அவர் சொல்வதையெல்லாம் செய்து, அந்நிய தேவர்களை சேவியாமலும் பணிந்துகொள்ளாமலுமிருந்து, அந்நிய மார்க்கத்தாரின் செய்கைகளின்படி செய்யாமலிருக்கும்போது, தேவன் நம் அன்றன்றுள்ள ஆகாரத்தை ஆசீர்வதிக்கிறார். ஆரோக்கியமான வாழ்வைத் தருகிறார். கர்ப்பத்தின் ஆசீர்வாதத்தைத் தந்து ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவதாகக் கூறுகிறார் (யாத்.25:28). சங்கீதம் 128-ல், கர்த்தருக்கு பயப்படுகிற மனிதனின் குடும்பம் எப்படி ஆசீர்வாதமாயிருக்கும் என்றும் அவனுடைய மனைவியும், பிள்ளைகளும் எப்படி தழைத்து கனி நிறைந்தவர்களாய் இருப்பார்களென்றும் வாசிக்கிறோம். பிள்ளைகளின் வாழ்வையும், பேரப்பிள்ளைகளின் வாழ்வையும் காணும்படி ஆயுசுநாட்களையும் நீட்டித்துத் தருவார்.

## ஆசீர்வாதத்தின் காரணிகள்

**ஜெபம்:** முற்பிதாவாகிய யாக்கோபு, இஸ்ரவேலாக மாறின சம்பவம் நாமறிந்ததே. நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்று இராமுழுவதும் தேவனோடு போராடுகிறார். அதன் விளைவு அவர் தேவனை முகமுகமாய்க் காண்கிறார். எத்தன் எண்ணப்பட்ட அவருடைய பெயர் இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டது. தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே என்று ஆண்டவரே அவரை மெச்சிகொள்ளுகிறார் (ஆதி.32:21-31). யாபேசுக்கு, அவன் தாயார், துக்கம் என்று அர்த்தங்கொள்ளும் பெயரிட்டிருந்தாலும், தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையை பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டபோது, அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அவனுக்கு அருளினார். மட்டுமல்லாமல், அவன் சகோதரரைப் பார்க்கிலும் அவனை கனம் பெற்றவனாக்கினார் (1நாளா.4:9-10). ஜெபமும், வேண்டுதலும் நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறதாயிருக்கின்றது. சத்துருவின் திட்டங்களை முறியடித்ததால், யாகேல், ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளாக மாறினாள். கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள். சாதாரண குடும்பப் பெண்ணாக இருந்தாலும், எதிரி நாட்டின் படைத்தளபதியான சிசெராவை, வெறும் ஆணியையும், தொழிலாளியின் சுத்தியலையும் வைத்து நெற்றியில் உருவக்கடாவி, தலையை உடைத்துப் போட்டாள் (நியா.5:24).

அதாவது அந்த மூளையில் தேவபிள்ளைகளுக்கு எதிராக இருந்த சகல திட்டங்களையும் அழித்துப் போட்டாள். சாதாரண மக்களாகிய நாமும், இந்நாட்களில், தேவபிள்ளைகளுக்கு எதிராக தீட்டப்படும் எல்லா சதித்திட்டங்களையும் நம் முழங்கால் மூலம் முறியடிக்க முடியும்.

## தேவபிரசன்னம்

கர்த்தருடைய பெட்டி, கித்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் அவனையும், அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார். தேவ பிரசன்னம் நம் வீட்டில் இருக்க வேண்டுமானால், தேவனை துக்கப்படுத்தும் அனைத்துக் காரியங்களும் நம் வாழ்வைவிட்டும், வீட்டைவிட்டும் அகற்றப்பட வேண்டும் (2 சாமு. 6:10). அப்போது தேவபிரசன்னம் நம் வீட்டை நிரப்பி, நம்மையும், நம் வீட்டாரையும் ஆசீர்வதிக்கும்.

## கீழ்ப்படிதல்

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாக்கிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய் செவிகொடுப்பாயானால், என்ற நிபந்தனையோடு பல ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. கட்டளைகளின்படி செய்ய கவனமாயிருக்கும்படி செவிகொடுக்க வேண்டும். செய்ய கவனமற்று இருப்போமானால், எதிர்மறையான சாபங்கள் வந்து சேரும். கீழ்ப்படிதல், பலிகளைப் பார்க்கிலும் ஆண்டவருக்குப் பிரியமானது. கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்படிந்து செயல்படுத்தும்போது, பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் நம்மை மேன்மையாக வைப்பார். பட்டணத்திலும், வெளியிலும், போகையிலும், வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போம். கர்ப்பத்தின் கனியும், நிலத்தின் கனியும், மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். கூடையும், மாப்பிசைகிற தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். நமக்கு விரோதமாக, ஒரு வழியாய் வருகிறவர்கள் ஏழு வழியாய் ஓடிப்போவார்கள். நாம் கையிடும் எல்லா வேலைகளிலும் ஆசீர்வாதம் கட்டளையிடுவார். கர்த்தருடைய கட்டளைகளைக் கைகொண்டு அவர் வழிகளில் நடக்கும்போது, ஆணையிட்டபடியே, தமக்குப் பரிசுத்த ஜனமாக நம்மை நிலைப்படுத்துவார். கர்த்தருடைய நாமம் நமக்குத் தரிக்கப்பட்டது என்று கண்டு எல்லாரும் நமக்கு பயப்படுவார்கள். வாலாக்காமல், நம்மைத் தலையாக்குவார். கடன் வாங்காமல், கடன் கொடுக்கிறவர்களாக மாற்றுவார் (உபா.28:1-14).

## தசமபாகம்

தசமபாகங்களை பண்டகசாலையாகிய ஆலயத்திலே கொண்டு செலுத்தும்போது, வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் நம்மை ஆசீர்வதிப்பார். இதினால் தம்மை சோதித்துப் பார்க்கும்படி தேவன் கூறுகிறார். வேறெதிலும் நாம் தேவனை சோதித்துப் பார்க்கக்கூடாது. இந்த ஒரு காரியத்தில் மட்டுமே சோதித்துப் பார்க்க நமக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றது. தசமபாகம், பழைய ஏற்பாட்டுக் கட்டளை மட்டுமல்ல; புதிய ஏற்பாட்டிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாகவே, இடமில்லை என்கிற அளவிற்கு தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் (மல்.3:10).

வேதத்தில் கூறப்பட்டிருக்கும் சகல ஆசீர்வாதங்களையும், வேதம் கற்பித்திருக்கும் வழிகளைப் பின்பற்றி நாம் பெற்றுக் கொள்வோம். கிறிஸ்துவுக்குள், உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும், நம்மை ஆசீர்வதிக்கும் கர்த்தர், (எபே.1:3,6) தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை சுவிகாரப் புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். நம் சந்ததியின் மேல் தம் ஆவியையும், நம் சந்தானத்தின் மேல் தம் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் என்றும் வாக்குப்பண்ணியிருக்கிறார் (ஏசாயா 44:3) நம்முடைய சந்ததி கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியென்று, பார்க்கிற யாவரும் அறிந்து கொள்வார்கள். (ஏசாயா 61:9). இத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதமாக வாழ, சபைக்கும், சமுதாயத்திற்கும் ஆசீர்வாதமாக மாற கர்த்தர் உங்களைத் தகுதிப்படுத்துவாராக!



# சத்தியத்திற்காக வைராக்கியமாய் நின்ற ஒரு அப்போஸ்தலரின் சகாப்தம்

## சங்கை. V.J.பாலஸ்

5.10.1940 - 24.02.2025

அப்போஸ்தலர் Rev.V.J.பாலஸ் அவர்கள் 1940 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதி நாகர்கோவிலில் உள்ள சீயோன்புரம் என்ற ஊரில் பிறந்தார்கள். ஒரு வயதில் தன் தாயை இழந்து, தகப்பன் மற்றும் ஆறு சகோதரிகளோடு செல்லமாக வளர்க்கப்பட்டு, 20 வயதிற்குள் சிலம்பு வீர விளையாட்டுகள், குடி, சூதாட்டம் போன்ற துன்மார்க்க செயல்களில் ஈடுபட்டும் கடவுள் இல்லை என்ற கொள்கை உடையவராய் மாறிவிட்டார்கள். அந்த சமயத்தில் வீர விளையாட்டுகளில் ஈடுபட்டபோது உயரமான இடத்திலிருந்து கீழே விழுந்து கால் எலும்புகள் நொறுங்கி வைத்தியர்களால் குணமாக்க இயலாத சூழ்நிலையில் கடற்கரையில் போய் தற்கொலை செய்யப் போனபோது தனது நண்பனால் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு சிலுவைக் காட்சியைக் கண்டு இரட்சிக்கப்பட்டார்கள். இயேசு என்னை குணமாக்கினார் அவருக்காக ஊழியம் செய்வேன் என்று தன்னை அர்ப்பணித்தார்கள். இயேசு பரிபூரண சுகத்தை கொடுத்ததால் 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏ.ஜி. வேதாகமக் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் பயின்று பட்டம் பெற்று திருவண்ணாமலை, சங்கரன்கோயில், ராமலிங்கபுரம், தென்காசி போன்ற ஊர்களிலும் பின்பு திருநெல்வேலியில் 50 ஆண்டுகள் ஊழியத்தை செய்து வெற்றியாய் முடித்திருக்கிறார்கள். 1965 ஆம் ஆண்டு Mrs.நகோமி ரூத் அவர்களோடு திருமணமாகி அவர்கள் ஆசிரியராக பணியாற்றிய நிலையில் போதகரோடு இணைந்து ஊழியம் செய்வதற்காக தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு, ஜெபத்திலும் ஊழியத்திலும் 60 ஆண்டுகள் இணைந்து ஊழியம் செய்திருக்கிறார்கள். தன் மூன்று பிள்ளைகளையும் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்து ஆறு பேரப்பிள்ளைகளும் ஊழியத்தில் தற்போது ஈடுபட்டிருக்கிறார்கள். கொள்ளு பேத்தியையும் கர்த்தர் தந்தார்.

அழைத்த தேவனுக்காக தன் சொத்துக்களை எல்லாம் விற்று ஆலய நிலம் வாங்கவும், கட்டவும் தியாகமாய் கொடுத்திருக்கிறார்கள். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சத்தியத்திற்காக ஜீவனையும் பணையம் வைத்து ஊழியம் செய்திருக்கிறார்கள்.

திருநெல்வேலியில் ஆலயம் கட்டப்பட்டு இரண்டு முறை விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான ஊழியர்களையும் நூற்றுக்கணக்கான சபைகளும் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஸ்தாபனத்தின் மீது மிகுந்த பற்றும் ஸ்தாபனத் தலைவர்களோடு நல்ல உறவிலிருந்தும் பல சபைகளின் பிரச்சனைகளை தீர்ப்பதில் மிகுந்த உதவியாக இருந்திருக்கிறார்கள். தான் கற்றுக்கொண்ட சத்தியத்திலும் உறுதியாய் அதோடு நகையை கழட்ட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்கள். ஊழியர்கள் தியாகமாய் ஊழியம் செய்யவும், இடங்களை ஸ்தாபனப் பெயரில் வாங்க வேண்டும் என்பதிலும் நல்ல முன்மாதிரி வைத்தார்கள். ஸ்தாபனத்தில் Presbyterராக பல ஆண்டுகளும், Regional Overseer-ராகவும், நிர்வாக குழு உறுப்பினராக ஓர் ஆண்டும், Extention Bible College Co-ordinator-ராகவும் செயலாற்றிருக்கிறார்கள். தன் நகைச்சுவையான பிரசங்கத்தினால் அன்புடன் கண்டிப்பான வேத உபதேசங்களை மக்களின் மனதில் பதிய வைத்திருக்கிறார்கள்.

வாலிபர் முகாம்களில் அவர் கொடுத்த செய்தியின் மூலம் எண்ணற்ற வாலிபர்கள் தொடப்பட்டிருக்கிறார்கள். இயேசுவின் வருகை குறித்து பிரசிங்கித்தும், "உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு" என்ற புத்தகத்தை வெளியிட்டதின் பலனாக ஆயிரக்கணக்கானோர் தொடப்பட்டிருக்கிறார்கள். தவறுகள் எந்த இடத்தில் நடந்தாலும் கண்டிப்பதில் துணிச்சலும், நேசிப்பதில் குழந்தை மனமும், மனதில் பட்டவற்ற எதார்த்தமாய் பேசவும் ஒரு போதும் தயங்கியதில்லை. கடைசி ஞாயிறு அன்றும் செய்தியளித்து தன் ஓட்டத்தை வெற்றியாக முடித்திருக்கிறார்கள்.

**உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு (ஆமோஸ் 4:12)**

Rev. James Willingson



# தானியேலின் புஸ்தகம்

## புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University


இக்கட்டுரையில் நாம் தரும் விபரங்களை வாசிக்க எளிதாய் இருக்கும்படி ஆறு முக்கிய தலைப்புகளின் கீழ் தந்துள்ளோம்.

### யார் இந்த தானியேல்?

இப்புத்தகத்தை எழுதியது தானியேல் தீர்க்கதரிசி ஆவான். நமதாண்டவராகிய இயேசுவும் தானியேலை மேற்கோள்காட்டியுள்ளார் (மத்.24:15). இந்த தானியேல் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவனாவான். தானி.7:1,28;8:2;9:2;10:1,2;12:4,5 ஆகிய வேதபகுதிகள் மூலம் இதை நாம் அறியலாம்.

இவன் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு உறவுமுறையானவன். துரைமார்களில் ஒருவனும் யாதொரு மாசும் இல்லாமல் அரண்மனையில் சேவிக்கத்தக்க தகுதியுடையவனாயிருந்தான், (1:3;4:17). தானியேலும் எசேக்கியேலும் ஒத்தொருமித்த வயதுடையவர்கள்; ஆனால் எரேமியாவைவிட தானியேல் இளையவன்.

'தானியேல்' என்ற பெயருக்கு **'தேவன் (எனது) நியாயாதிபதி'** என்று பொருள். தானி.1:3-6 வசனங்களில் தானியேல் துரைமார்களில் ஒருவனாயிருந்தான் எனக் காண்கிறோம். பாபிலோனின் அரசனான நேபுகாத்நேச்சார் மூன்று முறை (கிமு606,597,586) யூதாவின்மேல் படையெடுத்து வந்து எருசலேமை இடித்து, எரித்து, அழித்துப்போட்டான். தேசத்தில் பரம ஏழைகளாய் இருந்தவர்கள் தவிர யூத ஜனங்கள் அனைவரையும் ஒவ்வொருமுறையும் சிறைப்பிடித்துச் சென்றான்.

முதலாம் படையெடுப்பான கிமு 606-ல் யூதாவின் அரசனாயிருந்த யோயாக்கீம்-ஐயும் அவனுடன் பெருங்கூட்டத்தையும் சிறைப்பிடித்து பாபிலோன் தேசத்துக்குக்கொண்டு சென்றான். அவர்களுள் முக்கியமானவர்கள் தானியேலும் அவனுடைய நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆவர். சிறைப்பிடிக்கப்பட்டவனாய் பாபிலோன் சென்ற தானியேல் சுமார் 80 ஆண்டுகள் பாபிலோனிலேயே தங்கியிருந்து ஊழியம் செய்தான்.

கிமு 606-ல் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்ட தானியேல் தன்னுடன் சிறைப்பட்டு வந்துவிட்டவர்களுக்கும் கிமு 597,586 ஆகிய காலக்கட்டங்களில் சிறைப்பட்டு வரவிருந்த யூதாவின் மக்களுக்கும் பாபிலோனில் இருந்துக்கொண்டு ஊழியம் செய்தான். எசேக்கியேல் **"கர்த்தர் அழிப்பார், கர்த்தர் திரும்பவும் கட்டுவார்"** என்ற அழிவின் செய்தியையும், நம்பிக்கையின் செய்தியையும் மக்களுக்குத் தந்தான். ஆனால் தானியேலோ, நேபுகாத்நேச்சாரின் அரண்மனையில் தனக்கிருந்த செல்வாக்கைக் கொண்டு அரசாங்க காரியங்களில் சிறைப்பட்ட தனது மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளைப் பெற்றுத்தந்தான்.

இளம் வயதிலேயே அயல்நாட்டில் அடிமையாயிருந்தான், நேர்மையாக வாழ்ந்தான். பிறர் பொறாமைப்படும் அளவிற்கு உயர்வுகளைக் கண்டான். அநியாயமாய்த் தண்டிக்கப்பட்டான். எனினும் கர்த்தரிடத்தில் ஜெபிப்பதும், கர்த்தரை முற்றிலும் நம்புவதிலும், அவருக்கு ஆராதனை செய்வதிலும் உண்மையாயிருந்தான், (6:20).

தனது வயதுக்கு மிஞ்சின ஞானம் உடையவனாய் இந்த தானியேல் சொப்பனங்களையும், தரிசனங்களையும் காணவும், பிறரது சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் அறிவுடையவனாயும் இருந்தான். இஸ்ரவேலுக்கும், அன்றைய வல்லரசுகளுக்கும், சரித்திரத்தில் சம்பவிக்கப்போவது என்ன என்பதை துல்லியமான

சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலம் கண்டு அறிவித்தான். முழு உலகத்துக்கும் என்ன சம்பவிக்கப்போகிறது என்றும், கடைசி காலத்துக்குரிய தேவனுடையத் திட்டம் என்னவென்பதையும் விவரித்துச் சொன்னான்.

மேதியனாகிய தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும், தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது (தானி.6:28). அதற்கு முன்பு ஆண்ட பாபிலோனிய மன்னர்கள் காலத்திலும் தானியேல் கொலுமண்டபத்தில் (Royal Court) இருந்தான் என்று அறிகிறோம் (தானி.2:49).

## தானியேல் புத்தகம் சொல்வது என்ன?

தானியேல் புத்தகம் தீர்க்கதரிசன புத்தகமாயிருந்தாலும் ஒரு சரித்திர சம்பவத்தைத் தருவதுபோல பல சம்பவங்கள் இப்புத்தகத்தின் முதல் பகுதியில் தரப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் தானியேல் கண்ட தரிசனங்கள் தரப்பட்டுள்ளன.

உலக சரித்திரத்தின் மிக முக்கியமான சரித்திரக் குறிப்புகளைக் கொண்டுள்ள இப்பகுதியில் சிறுபிள்ளைகளின் மனதில்படும்படி எடுத்துச் சொல்லப்படும் சிறுகதைகளாகவும் தரப்பட்டுள்ளன. குறிப்பாக மூன்று சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

### ◈ எரிகிற அக்கினிச்சூளை : (அதி 3)

தானியேலின் நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் அக்கினி சூளையில் போடப்பட்டதும், தேவனுடைய அற்புதச் செயலால் அவர்கள்மேல் அக்கினி பலவந்தம் செய்யாமல் அவர்கள் பாதுகாக்கப்பட்டதும், வாசிப்போர் அனைவர் மனதிலும் விசுவாசத்தை வளர்க்கும் ஆற்றலுள்ள சம்பவமாகும்.

### ◈ கையுறுப்புத்தோன்றி சுவரில் எழுதுதல்: (அதி 5)

நேபுகாத்நேச்சாரின் வாரிசு அரசனான பெல்ஸாத்சார் தனது விருந்தாளிகளுடனும், அரண்மனைப் பெண்களுடனும் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கர்த்தருடைய பாத்திரங்களில் மதுபானம்பண்ணினான். அப்பொழுது சுவரில் கையுறுப்புத்தோன்றி **'மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்' நீ தராசில் நிறுக்கப்பட்டு குறைவாய் காணப்பட்டாய்** என எழுதிற்று. வாசிப்போரை திகிலடையச் செய்யும் இச்சம்பவம், அன்று அந்த அரசனையும் அவனைச் சார்ந்த அனைவரையும் கலங்கச்செய்தது.

பாபிலோன் வல்லரசின் காலங்கள் அன்றுடன் முடிவடைந்தது என்று காண்கிறோம் (தானி. 5:30,31).

### ◈ சிங்கக் கெபியில் தானியேல்: (அதி 6)

மனிதனுக்குப் பயப்படுவதைவிட கர்த்தருக்குப் பயப்பட்டு முறையாய் ஜெபம்பண்ணி ஆராதனை செய்த தானியேல் சிங்கக்கெபியில் போடப்பட்டான். அவனுடைய இடைவிடாத ஜெபம், ஆராதனை மற்றும் விசுவாசத்தால் சிங்கங்களின் வாய் அடைக்கப்பட்டது. தானியேல் தப்புவிக்கப்பட்டான்.

மயிர் சிலிர்க்கச் செய்யும் இவ்வித அற்புதமானச் சரித்திரங்கள் திரும்பத்திரும்ப வாசிக்கப்பட வேண்டியவையே!

## தானியேல் புத்தகத்தின் பொருளடக்கம்

தானியேல் புத்தகத்தை மூன்று பிரிவுகளாகப் பகுத்துப் படிக்கலாம். எனினும் அதற்குமுன் இப்புத்தக அதிகாரங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பார்ப்பது இதன் பொருளடக்கத்தை எளிமையாக்கும்.

### I. தானியேல் பற்றிய விபரங்கள்:

- தானியேல் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்படுதல் (அதி 1).
- தானியேல் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்துக்கு வியாக்கியானம் தருதல்; அரசன் கண்ட சிலை பற்றிய விளக்கம் (அதி 2).
- அக்கினிசூளையில் தானியேலின் நண்பர்கள் காக்கப்படுதல் (அதி 3).

- நேபுகாத்நேச்சார் “அரை- பைத்தியமாகி” மனுஷரினின்றுத் தள்ளப்படுதல் (அதி 5).
- சிங்கக் கெபியில் போடப்பட்ட தானியேல், சேதமின்றி பாதுகாக்கப்படுதல் (அதி 6).

**II. தானியேலின் தரிசனங்கள்:**

- நான்கு மிருகங்களைப் பற்றிய தரிசனம் (அதி 7-12).
- ஆட்டுக்கடாவும் வெள்ளாட்டுக்கடாவும் (அதி 8).
- 70 வாரங்கள் பற்றிய தரிசனம் (அதி 9).
- வரவிருக்கும் ராஜாக்கள் (அதி 10-12).

இந்த எளிய பொருளடக்கத்தை மனதிற்கொண்டு, தானியேல் புத்தகத்தை மூன்று பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்கலாம்.

### தானியேல் புத்தகத்தின் மூன்று பிரிவுகள்

தானியேல் புத்தகத்தில் மொத்தம் 12 அதிகாரங்கள் உள்ளன. அவற்றை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். இதில் முதல் பகுதி முன்னுரையாகவும், இரண்டாம் பகுதி தானியேல் பற்றிய விபரங்களையும், மூன்றாம் பகுதி தானியேலின் தரிசனங்களையும் நமக்கு தருகின்றன.

**பிரிவு 1:** (அதிகாரம் 1)

இந்த அதிகாரம் **எபிரெய மொழியில்** எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் சரித்திர நிகழ்வுகளுக்கு இப்பகுதி முன்னுரையாக அமைந்துள்ளது.

**பிரிவு 2**: (அதிகாரம் 2 முதல் 7 வரை) இரண்டாம் அதிகாரம் 4ம் வசனம் முதல் ஏழாம் அதிகாரம் முடியவுள்ள இப்பிரிவு **அரேமேயு மொழியில்** எழுதப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எழுச்சி அடைந்த நான்கு வல்லரசுகளின் வீழ்ச்சியை பற்றிய சரித்திர சுருக்கத்தை நமக்குத் தருகின்றன. இவை அன்றைய உலகின் வல்லரசுகளாக திகழ்ந்தவை ஆகும். அவற்றை தொடர்ந்து நிலையாய் ஸ்தாபிக்கப்படும் நமதாண்டவரின் நித்திய ராஜ்யம் பற்றியும் நமக்கு சொல்லுகின்றன.

- தானியேல் நேபுகாத்நேச்சாரின் அரண்மனையில் பெரியவனாகுதல் (அதி. 2).
- சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற தானியேலின் மூன்று நண்பர்களும் எரிகிற அக்கினி சூளையில் இருந்து காப்பாற்றப்படுதல், தேவ புத்திரனுக்கு ஒப்பான சாயலுடைய ஒருவர் அவர்களுடன் தோன்றி காட்சியளித்தல் (அதிகாரம் 3).
- தேவ நியாயத்தீர்ப்பாக நேபுகாத்நேச்சார் மனுஷரினின்று தள்ளப்படுதலும், மிருக சுபாவம் அவனில் காணப்பட்டு வெளியில் மிருகங்களோடே சஞ்சரித்து மாடுகளைப்போலப் புல்லை மேய்ந்து ஆகாயத்துப் பனியில் நனையும் தற்காலிக பைத்திய நிலை (அதிகாரம் 4).
- பெல்ஸாத்சாரின் அரண்மனையில் நடந்த ராஜ விருந்தும் பாபிலோன் ராஜ்யத்தின் வீழ்ச்சியும்; இதில் தானியேலின் முக்கிய பங்கு (அதிகாரம் 5)
- சிங்கக்கெபியில் கொல்லப்படும்படி தூக்கி எறியப்பட்ட தானியேல் அற்புதமாக விடுவிக்கப்படுதல் (அதிகாரம் 6).
- நான்கு சாம்ராஜ்ய வீழ்ச்சியும் நீண்ட ஆயுசுள்ளவராகிய (7:21) நமதாண்டவரின் ஆட்சி ஸ்தாபிக்கப்படுதலை பற்றியும் தானியேல் கண்ட நான்கு மிருகங்களைப் பற்றி தரிசனங்கள் (அதிகாரம் 7)

மேற்கண்ட 5 குறிப்புகள் இப்புத்தகத்தின் இரண்டாம் பிரிவுக்கு சிறப்புச் சேர்க்கின்றன.

**பிரிவு 3:** (8 முதல் 12 வரையுள்ள அதிகாரங்கள்)

இப்பிரிவிலுள்ள ஐந்து அதிகாரங்களும் ஒன்றாம் அதிகாரத்தைப் போலவே **எபிரெய மொழியில்** எழுதப்பட்டுள்ளது. தானியேலுக்கு அசாதாரணமான வெளிப்பாடுகள் கொடுக்கப்பட்டன. தேவனிடமிருந்து தேவதூதர்கள் அவனை வந்து சந்தித்தனர்.

கீழ்காணும் வெளிப்பாடுகள் மிகத்துல்லியமாக அவனுக்குக் கொடுக்கப்பட்டன.

- யூத ஜனங்கள் புறஜாதியாரின் ஆளுகைக்கு உட்படுவர். ஆட்டுக்கடாவும் வெள்ளாடும் பற்றிய தரிசனம் (அதிகாரம் 8).
- தானியேலின் ஜெபமும் 70 வாரங்களைப் பற்றிய தரிசனமும்; இக்காலத்தில் மேசியா யூதா ஜனங்களுக்காக தமது பணியைத் தொடங்கி செய்து முடிப்பார் (அதிகாரம் 9).
- நாட்களின் முடிவில் ஸ்தாபிக்கப்படும் நமது கர்த்தரின் ராஜ்யமும் இஸ்ரவேலரின் பாடுகளின் முடிவும் (10 முதல் 12 வரையுள்ள அதிகாரங்கள்).

### தானியேல் புத்தகத்தின் தீர்க்கதரிசனச் செய்திகள்

தானியேல் புத்தகத்தின் தீர்க்கதரிசனச் செய்திகள் தேவனுடைய இறையாண்மையையும், அவரது கடைசி வெற்றியையும் நமக்கு பறைசாற்றுகின்றன. சாம்ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் இதிலடங்கும். மேசியாவின் வருகை இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நமது தேவனுடைய நித்திய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலையும் இந்த இறையாண்மை உள்ளடக்கியுள்ளது.

இந்த இறையாண்மையை கீழ்கண்டவாறு பகுத்துப் பார்க்கலாம்:

- **உலக விவகாரங்களின் மேல் தேவனுடைய இறையாண்மை:** நேபுகாத்நேச்சார் போன்ற பராக்கிரமம் உள்ள மன்னர்கள்மேலும் ராஜ்யங்களின்மேலும் சர்வ அதிகாரமுள்ள ராஜாக்களுக்கும் நமது ஆண்டவரின் சர்வ வல்லமையை இதில் காண்கிறோம்.
- **உலக வல்லரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும்:** இரண்டாம் அதிகாரத்திலும், ஏழாம் அதிகாரத்திலும் தானியேல் கண்ட சொப்பனங்களும் தரிசனங்களும் ஒன்றன்பின் ஒன்றாகவரும் உலக வல்லரசுகளின் எழுச்சியைப் பற்றியும் அவற்றின் முடிவு பற்றியும் நமக்குத் தெரிவிக்கின்றன. இறுதியில் நமது கர்த்தரின் நித்திய ராஜ்ய ஸ்தாபகத்தையும் காண்கிறோம்.
- **வரப்போகும் மேசியா:** தானியேலின் 70 வாரங்கள் பற்றிய தீர்க்கதரிசனம் வரப்போகும் மேசியாவை பற்றியவை; மேசியாவாகிய கிறிஸ்துவின் பிறப்புக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவன் தானியேல் என்பது குறிப்பிடத்தக்கது. மேசியாவின் பாடுகள், கிறிஸ்துவில் நிறைவேறும், அவருடைய கடைசி வெற்றி ஆகியவற்றையும் இத்தீர்க்கதரிசனம் உள்ளடக்கியுள்ளது (9:24-27).
- **கடைசி காலங்கள்:** கடைசி கால தீர்க்கதரிசனங்கள் பற்றி தானியேல் புத்தகத்தில் நாம் பார்க்கிறோம் (7:8,24,27). 7:8ல் ஒரு சின்ன கொம்பு எழும்பி வருவதை நாம் காண்கிறோம்.

7:24ல் பத்து ராஜாக்களைக் குறிக்கும் பத்து கொம்புகளை பார்க்கிறோம். ஆனாலும் 7:24ல் நாம் காண்கிறபடி வானத்தின் கீழ் எங்கும் உள்ள ராஜ்யங்களில் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம், சகல சத்துவங்களும் அவரை சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்

- **நம்பிக்கை மற்றும் விசுவாசம்:** தானியேல் புத்தகம் முழுமையும் பாடுகளும், உபத்திரவங்களும் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், நம்பிக்கையின் வார்த்தைகளையும் நாம் பார்க்கிறோம். தேவன்மேல் பற்றுதலாய் இருந்து நமக்கு வரும் எதிரிடைகளின் மத்தியில் விசுவாசத்தை காத்துக்கொள்ள வேண்டும் என்றும் இப்புத்தகத்தில் நாம் பார்க்கிறோம்.
- **நமது மறுவாழ்வுக்கும் மறு சீரமைப்பிற்கும் தேவனுடைய திட்டம்:** தேவன் தமது ராஜ்யத்தை நித்திய ராஜ்யமாய் ஸ்தாபிப்பார். அவரது ஜனங்களுக்கு அது முடிவில் சமாதானத்தையும் நீதியையும் கொண்டுவரும் என்ற தீர்க்கதரிசனமும் நமக்கு உறுதியான நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

இப்புத்தகத்திலுள்ள முதலாம் அதிகாரத்தை எழுதுகையில் தானியேல் ஒரு வாலிபனாக இருந்திருக்க வேண்டும். அதன் 9 முதல் 12 வரையுள்ள அதிகாரங்களை எழுதும்போது தானியேல் சுமார் 80 வயதுள்ள முதியவனாக இருந்திருக்க வேண்டும்.

நம் தேவனுடைய ஞானம் அளவிட இயலாதது. பாபிலோனுக்கு சிறைப்பட்டுவந்துவிட்ட முதல் கூட்டத்தாரோடு தானியேலும் கொண்டு வரப்பட்டான். இது நமதாண்டவர் தமது அநந்த ஞானத்தில் செய்த செயலாகும். யெகோவா தேவனை அறியாத பாபிலோன் தேசத்தை சிறையிருப்பின் ஸ்தலமாக ஏற்கனவே தமது ஆதீனத்தில் தேவன் குறித்திருந்தார், அங்கு அரசியல் சூழ்நிலையில் தமது ஜனத்துக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் தரும்படி, தமது சிறந்த தீர்க்கதரிசியாகிய தானியேலைக் கட்டுண்டவனாகப் பாபிலோனுக்கு அனுப்பினார்.

'இந்த தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்' (எரேமியா 25:11) என்ற எரேமியாவின் வார்த்தைகள் மனதிற்கொள்ளப்பட வேண்டியவை ஆகும்.

அதேசமயத்தில் மார்க்க காரியங்களில் ஜனங்களுக்கு ஆலோசனையும், தீர்க்கதரிசனச் செய்தியையும் தர யோயாக்கீன் அரசனோடு சிறைப்பட்டு வந்த (கிமு 597) எசேக்கியேலை தேவன் பயன்படுத்தினார்.

## தானியேல் புத்தகத்தின் கருப்பொருள்

தானியேல் தேவனுடைய **இறையாண்மையை** மிகத்தெளிவாகக் கண்டு, அதை உலகத்துக்கு அறிவித்தான். இறையாண்மை என்பதை 'தேவனின் உச்ச மேலான அதிகாரம்' என்றும் 'சர்வ வல்ல தேவனின் ஆளுகை' என்றும் விளக்கலாம்.

இந்த தேவன் உன்னதமானவர் 'ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் (2:21). இந்த உன்னதமான தேவன், மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் (தானி.4:17,24,25,32). இந்த உன்னதமான தேவன் **அதிகாரியாகிய தேவன்** (5:23) **உன்னதமானவர்** (4:32;7:18), **ஜீவனுள்ள தேவன்** (6:20,26) **ஒப்பற்றவர்** (3:29), **நீண்ட ஆயுசுள்ளவர்** (7:9,13,21,26) என்றும் தானியேல் புத்தகத்தில் சிறப்பு அடைமொழிகளுடன் அறிமுகப்படுத்தப்படுகிறார். அவர் **சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர்** (7:9); **பரலோகத்தின் தேவனானவர்,** அவருடைய ராஜ்யம் அழியாமையுள்ளதாய் என்றென்றைக்கும் நிற்கும் (2:44).

வரப்போகிற மேசியாவைப் பற்றியும், எருசலேமின் புதுப்பொலிவு பற்றியும், வரப்போகிற நீதியின் ராஜ்யத்தைப் பற்றியும் தானியேல் உரைத்திருக்கிற தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்துடன் ஒப்பீடு செய்து வாசித்து பயனடையலாம்.

இக்கட்டுரையில் '**புத்தக அறிமுகம்**' என்ற எல்லைக்குட்பட்டு மேற்கண்ட விபரங்கள் மிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளதால் நேபுகாத்நேச்சார் கண்ட பொன்னான தலையையுடைய பெரிய சிலை, அவை உள்ளடக்கும் உலகில் தோன்றிய மற்றும் தோன்றப்போகிற வல்லரசுகள், உலகத்தின் முடிவில் அரசியல் சூழ்நிலைகளைப் பற்றிய விபரங்களை விளக்கமாய்த் தர இங்கு இடமில்லை மற்றும் பாபிலோனிய வல்லரசு வீழ்ச்சியடைந்த அந்த இரவில் பாபிலோன் அரண்மனையின் சுவரில் கையுறுப்புத் தோன்றி எழுதிய 5ம் அதிகாரத்தில் உள்ள விபரங்களை நேரமெடுத்து வாசித்தல் பயனளிக்கும்.

ஆட்டுக்கடா, வெள்ளாட்டுக்கடா, 70 வாரங்கள் பற்றிய தரிசனங்கள் மற்றும் உலகத்தின் முடிவு பற்றிய விபரங்களெல்லாம் கடைசிகால தீர்க்கதரிசனங்களோடு தொடர்புடையவை ஆகும். அவற்றையும் இங்கு விளக்கிச் சொல்ல இடமில்லை. தரமுள்ள பின்னணியங்களுடனுள்ள புத்தகங்கள் மூலம் அவற்றை வாசித்துப் பயனடையக் கேட்கிறோம்.

நமது உன்னதமான தேவனுடைய வருகைக்கு ஆயத்தமாவோமாக!

# குறுகிய கால மிஷனரிப் பயணம்



**Rev. J. தேவதாசன் கலையரசன்**
வில்லிவாக்கம் மண்டல தலைமைப் போதகர்
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்

பவுலுடைய மிஷனரிப் பிரயாணத்திற்கும் இன்று, நமது போதகர்கள் செய்து வரும் குறுகிய கால மிஷனரிப் பயணங்களுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறதை அறிவீர்களா? அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

பவுல் எபேசு சபையில் மட்டுமே 2 வருடத்திற்கு சற்று அதிகமாக தங்கி இருந்து ஊழியம் செய்து இருக்கிறார். மற்றப்படி சில நாட்கள், சிலவாரங்கள் மட்டுமே பெரும்பாலான ஊர்களில் தங்கி ஊழியம் செய்து இருக்கிறார். ஒரு சில நாட்களுக்குள் அவர் செய்த சுவிசேஷ ஊழியத்தால் சிலர் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்களை ஒருங்கிணைத்து ஒரு ஆராதனைக் குழு ஏற்படுத்திச் சென்றுவிடுவார். பின்னாளில் அந்த சபை உள்ளூர் மிஷனரி போதகரால் அல்லது ஒரு குழுவினரால் தொடர்ந்து நடத்தப்படும்.

போதகராக அழைப்பு உள்ளவர்கள் மட்டுமே கலாச்சாரம் கடந்து மிஷன் ஊழிய பிரதேசத்தில் நிரந்தரமாக தங்கி ஊழியம் செய்ய முடியும். அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாத நம்மைப் போன்ற போதகர்களின் குறுகிய கால மிஷன் பிரயாணமும் மிகச் சிறந்த விளைவுகளை ஏற்படுத்துகிறது. பவுல் மிஷனரிப் பிரயாணத்தைப்போல, சில நாட்கள் மட்டுமே ஒரு குறிப்பிட்ட பகுதியில் செய்யப்படும் நமது போதகர்களின் மிஷன் ஊழியமும் மிகுந்த பலனை, விளைவுகளை நிச்சயம் ஏற்படுத்தும், ஏற்படுத்துகிறதாக, மிஷன் தளப்பணியாளர்களும் வட இந்திய AG பிரதேச தலைவர்களும் சாட்சி கூறுகிறார்கள்.

பவுலின் மிஷனரிப் பிரயாணத்தை குறுகிய காலம் மிஷனரிப் பிரயாணம் என்ற தலைப்படுவது தவறல்ல. அவர் மொத்தம் மூன்று பிரயாணங்களின் குறைந்தபட்சம் 14 வருடங்கள் மிஷனரிப் பிரயாணங்களிலேயே காலம் கழித்திருக்கிறார். மிஷனரி வாழ்க்கையில் அவர் செலவழித்த காலங்களைக் கொண்டு அல்ல, ஒவ்வொரு இடத்திலும் அவர் தங்கிய காலம் குறுகிய காலம் என்ற அடிப்படையில் அவரது பிரயாணத்தை குறுகிய கால மிஷனரிப் பிரயாணம் என்று துணிந்து கூற முடியும்.

ஆனால் அந்த குறுகிய கால சந்திப்பில் அவர் ஆற்றிய பணியை நாமும் செய்யக் கூடுமேயானால், பவுல் ஒரு தனிமனிதராய் ஏற்படுத்திய விளைவுகளை "போதகர்கள் திரள்கூட்ட குறுகிய கால மிஷன் டிரிப்" குழுவாக அதை ஏற்படுத்த முடியும்.

### I. பவுலுடைய மூன்று மிஷனரி பிரயாண ஊழிய தொகுப்பு:

**1:1 முதல் மிஷனரிப் பிரயாணம்** (கிபி 46-48)

**அவர் சந்தித்த ஊர்கள்**

அந்தியோகியாவில் ஆரம்பித்து சீப்புருதீவு, பாப்பே பட்டணம், பெர்கேபட்டணம், பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா, இக்கோனியா பட்டணம், தெர்பை, லிஸ்தீரா பட்டணங்களிலும் பம்பிலியா, நாட்டில் உள்ள பெர்கே. அத்தாலியா பட்டணம் வந்து, ஆரம்பித்த இடமான அந்ததியோகியா வந்தடைந்தார். மீண்டும் அநேக நாட்கள் அங்கேயே தங்கி இருந்தார் (அப்.13,14ம் அதிகாரம்).

**1:2 இரண்டாம் மிஷனரிப் பிரயாணம்** (கிபி 49-52)

சந்தித்த நாடுகள், பட்டணங்கள் கலாத்தியா, பிலிப்பியா, தெசலோனிக்கியா, அத்தேனபட்டிணம், கொரிந்துப்பட்டணம் (அப். 15:36-18:22).

**1:3 மூன்றாம் மிஷனரிப் பிரயாணம்** (கிபி 53 - 56)

சந்தித்த நாடுகள் பட்டணங்கள், கலாத்தியா, பெர்சியா, எபேசு, பட்டாளம், மக்கதொனியா, கிரேக்கம் (அப்.18:23-21:17)

**1:4 அவர் நீண்டகாலம் மிஷனரி பிரயாணங்கள் செய்தார்**

அநேக நாடுகள் சென்றார். ஆனால் அவர் ஒவ்வொரு முறை சென்று சந்தித்த நாட்டிலும், ஊரிலும் **குறைந்த நாட்களே** தங்கி ஊழியம் செய்தார். ஆகவே அவரது மிஷனரிப் பிரயாணத்துடன் இன்று நாம் மேற்கொள்ளும் குறுகிய கால மிஷன்; டிரிப்பைத் **துணிந்து ஒப்பிட** முடியும்.

## II. காலம் குறுகியதென்றாலும் அவர் செய்த பணியின் விளைவு பெரியது

அவர் மிக குறுகிய காலம் ஒரு ஊரில் ஊழியம் செய்தார். எனில், அது அத்தேன பட்டணத்தில் செய்த ஊழியம் தான். சில நாட்கள் மட்டுமே அவர் அங்கு ஊழியம் செய்தார் (அப்.17:16-34).

எபேசுவில் அவர் தங்கிய காலம் 2 வருடத்திற்கு மேல் (அப்.19:1-20) கொரிந்துவில் 18 மாதங்கள் அவர் சந்திப்பினால் (அப்.18:1-18) பிலிப்பி பட்டணத்தில் பல வாரங்கள் (அப்.16:6-40) என்று ஒப்பிட்டு பார்க்கும்போது அத்தேன பட்டணத்தில் சில நாட்கள் மட்டுமே என்பது மிக குறுகிய காலம் தான். மிக குறைந்த விளைவுகள் தான் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டாலும் அதையும் குறைத்து மதிப்பிட முடியாது. அவரது அத்தேன பட்டண மார்ஸ் மேடை பிரசங்கம் இன்றும் புறஜாதிகளுக்கு எளிய நடையில் சுவிசேஷம் சொல்ல உதவுகிறது. (17:22-31) வீதியிலும், ஜெப ஆலயங்களிலும் பிரசங்கித்தார் (17:17). குறுகிய நாட்களிலேயே அநேகரை ஆதாயம் செய்தார். மார்ஸ் மேடையின் நியாயதிபதிகளில் ஒருவனாகிய அவர்களில் பிரபல்யமான தியோனிசியும், தர்மரி என்ற பெண்ணும் விசுவாசித்தவர்களில் முக்கியமானவர்கள் (அப். 17:34).

## III. பவுலின் குறுகிய கால மிஷனரிப் பிரயாண படிப்பினைகள்

**3:1 பிரயாணம்**

குறுகிய கால மிஷனரிப் பிரயாணமோ, நிரந்தர மிஷனரி அழைப்பு பெற்ற ஊழியரோ, "பிரயாணம்" செய்ய தயங்காதவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் குறுகிய கால மிஷன் டிரிப் சாத்தியமாகும் (2கொரி.11:25-28).

**3:2 அவரது குறிக்கோள்**

சுவிசேஷம் அறிவிப்பதும் சீஷராக்குவதும் அந்தந்த சபைகளில் மூப்பர்களை நியமிப்பதும், சீஷருடைய மனதை திடப்படுத்துவதும், விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி போதிப்பதும் கடிதம் எழுதுவதும் (அப்.15:21-23) அவரது நோக்கமாக இருந்தது.

**3:3 திரும்பிப்பார்க்கையில் மனநிறைவு**

பிரயாணங்களை முடித்து தனது இருப்பிடம் வந்து திரும்பி பார்த்தபோது மனநிறைவடையும் ஊழியம் செய்ததைப் பார்க்கிறோம் (ரோமர் 15:18-25).

## IV. தற்காலத்தில் நடைபெறும் குறுகிய கால மிஷன் பிரயாணங்கள்

4:1 எதைச் செய்தால் நல்லது, தவிர்க்க வேண்டியது எது?

பவுல் தனியாக அல்ல அதேசமயம் ஒரு பெரிய குழுவோடும் அல்ல. எப்போதும் சிறிய குழுவினரோடே சென்றார், (பர்னபா + மாற்கு, சீலா + தீமோத்தேயு).

4:2 பிறருக்கு பாரமாயிருப்பதை தவிர்த்தார் (1தெச. 2:9) .

- நமது சந்திப்பு அங்குள்ள சபைகளுக்கு சுமையாக அல்ல. ஆதரவாக இருப்பது அவசியம்.
- நமது சொந்த இடங்களில் இருப்பது போன்ற வசதிகளை மிஷன்தளத்தில் நாம் எதிர்பார்ப்பது அங்குள்ளவர்களுக்கு உதவியாக இராது. மாறாக சுமையாக மாறிவிடும்.

**4:3 நமது குழுவிடம் வட இந்திய மிஷனரிகள் எதிர்பார்ப்பது**

- அவர்களை நேரில் சந்திப்பது, அவர்கள் இருப்பிடத்தில் தங்குவது, அவர்களின் உணவை தயங்காமல் எடுத்துக் கொள்வது, நமது அன்பை வெளிப்படுத்தும் பரிசுகள் கொடுப்பது.
- ஆவிக்குரிய நிலையில் இறையியல் போதனைகளை அதிகம் விரும்புகிறார்கள், தேவையும் உண்டு.
- பெரிய அளவிலான திறந்த வெளி கூட்டங்கள் நடத்துவது முன்போல அங்கும் வாய்ப்புகள் குறைவு பெரும்பாலும் சபை விசுவாசிகளை ஸ்திரப்படுத்தும் கூட்டங்களையே எதிர்பார்க்கிறார்கள்.

**இறுதியாக**

வருடத்தில் ஒரு முறை நீங்கள் சென்று பாருங்கள். அவர்களின் ஊழியம் ஸ்திரப்படும். உங்களுடன் இருக்கிறோம் என்கின்ற உங்கள் கனிவான வார்த்தை மிஷனரிகள் தங்கள் ஊழியத்தில் நிலைத்து நிற்க உதவும். நீங்கள் கொடுக்கும் மாதாந்திர உதவி, புதிய ஊழியங்களை ஏற்படுத்த உதவும். இதுவரை வழக்கமாக சென்று வரும் போதகர்களுக்கு நன்றி. இதுவரை குறுகிய கால மிஷன் பிரயாணம் செய்யாதவர்கள் வரும் காலங்களில் பிரயாணப்பட திட்டமிடுங்கள்.

அடுத்தமுறை நீங்கள் குறுகிய கால மிஷன் டிரிப் போகும்போது பவுல் செய்த அதே ஊழியத்தை நானும் செய்கிறேன் என்று நம்புங்கள். பவுலைப் போல அர்ப்பணத்தோடும், ஆத்தும தாகத்தோடும் சபைகளை குறித்த கவலைகளோடும் செல்வீர்களானால். உங்கள் பயணமும் சபை சரித்திரத்தில் இடம் பெறும்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# சத்தமில்லா ஒரு சாதனை

## போதகர் ஜே.ஜே.செல்வின் வில்சன்

29.11.1945 - 24.02.2025

பரிபூரண ஜீவன் முன்னாள் ஆசிரியர் (2005-2011)

ஸ்தாபகர், நித்தியபேரின்பம் பத்திரிக்கை

மற்றும் திருமணத் தகவல் மையம்

**சங்கை ஜே.ஜே.செல்வின் வில்சன்** தூத்துக்குடி மாவட்டம், மெஞ்ஞானபுரத்தில் வைத்தியரான அவர்களது தாத்தா வீட்டில் பிறந்தார். கடினமாக பிரசவத்தினிமித்தம் அவர்களது தாயார், "ஊழியத்திற்கே அர்ப்பணிக்கிறேன்" என்ற பொருத்தனையைச் செய்ய, தேவனால் முன்குறிக்கப்பட்டவரானார். தகப்பனார் இலங்கையில் தேயிலைதோட்டத்தில் தேயிலை உற்பத்தி நிலைய அதிகாரியாக பணியாற்றியதால் இலங்கை சென்று அங்கு தனது படிப்பைத் தொடர்ந்தார். சிறுவயதிலிருந்தே தமிழ்மொழிமேல் பற்று உடையவராக இருந்தார். தினமும் ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, ஞாயிறுதோறும் ஒரு அதிகாரத்தை மனப்பாடம் செய்வது, தவறாமல் ஆலயம் செல்வது போன்ற நற்போதனைகளோடு தனது தாயாரால் வளர்க்கப்பட்டார்.

"உபத்திரவத்தின் குகையிலே நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்" என்ற வார்த்தையின்படி தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் மற்றும் கடனால் எல்லாராலும் கைவிடப்பட்ட சூழ்நிலையில் மீண்டும் இயேசுவின் அன்பை ருசிபார்க்க, வாழ்வில் ஒரு திருப்புமுனையைப் பெற்று முந்தின சீருக்கு திருப்பினார். இலங்கையில் இருந்த நாட்களில் **சீலோவாம்** சபையில் **போதகர் அருமைநாயகம்** அவர்களால் வெகு கண்டிப்புடன் உருவாக்கப்பட்டார். **சாது செல்லப்பா** அவர்களின் **"அக்கினி"** பத்திரிக்கையை இலங்கையில் மறுஅச்சு செய்து வெளியிட வாய்ப்பை பெற்றார்.

1983-ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின்போது, தேவன், "நீர் உன் தேசத்திற்கும், உன் இனத்தாரிடத்திற்கும் போ" என்று திட்டமாய் உணர்த்தினபடியால் இலங்கையிலிருந்து தாயகமாகிய இந்திய தேசத்திற்கு குடும்பத்தாரோடு வந்தார். இந்திய தேசத்திற்கு வந்து 1984-ம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை பாளையங்கோட்டையில் ஒரு புத்தகக் கடையை நடத்தினார். "எந்த சபைக்கு போவது? " என்ற ஊக்கமாய் ஜெபிக்க, ஊழிய வாஞ்சையுள்ள சகோதரர்களால் பாளையங்கோட்டை பீஸ் ஏ.ஜி. சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அங்கு போதகர் சங்கை ரத்தினம்பால் அவர்களால் உருவாக்கப்பட்டார். அவர்கள் போதகர் செல்வின் வில்சனை குறித்து சொல்லும் சாட்சி, **"இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்".**

முழுநேர ஊழிய அழைப்பை பெற்ற அவர்கள், நமது ஸ்தாபனத்தின் மூலமாக நடத்தப்பட்ட விரிவாக்க வேதாகம கல்லூரியில் பட்டம் பெற்று உதவி ஊழியரானார். 1987ஆம் ஆண்டு தேவன் **"நித்தியபேரின்பம்"** என்ற பத்திரிக்கை ஊழியத்தை ஆரம்பிக்க வழிநடத்தினார். முதல் இதழ் 17.01.1987 அன்று வெளியானது. பத்திரிக்கை சென்ற இடங்களிலெல்லாம் எங்கள் பிள்ளைக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை, உதவி செய்யுங்கள் என்ற கண்ணீர் கடிதங்கள் வர **"நித்தியபேரின்பம் திருமணத் தகவல் ஊழியம்"** உதயமாகி இன்றுவரை ஆசீர்வாதமாக செயல்படுகிறது. இவ்வூழியத்தின் மூலமாக இணைக்கப்பட்டவர்கள் ஆயிரம் ஆயிரம்.

- இதன் தொடர்ச்சி 31 பக்கம் பார்க்கவும்



# இரத்ததானம் செய்யக்கூடாதா?

## யேகோவா சாட்சிகளின் தவறான போதனை

**Rev.R.மதன்ராஜ்**
ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி
Contributing Editor, Paripoorana Jeevan

இன்று பெரும்பாலான அறுவை சிகிச்சைகள் இரத்தத்தின் உதவியில்லாமல் நடைபெறுவதில்லை. சிறுநீரகம் செயலிழந்த அநேகர் இன்று டயாலிசிஸ் மூலம் உயிர்வாழ்வதற்கு இரத்தம் அவசியப்படுகிறது. இந்த தேவையை அறிந்து தங்களுடைய இரத்தத்தை தானமாய் கொடுக்க முன்வருபவர் அநேகம். ஆனால் இரத்தத்தை தானமாய் கொடுப்பதற்கும், மற்றவர்களுடைய இரத்தத்தை தங்களுடைய சரீரத்தில் ஏற்றிக்கொள்வதற்கும் 'யேகோவா சாட்சிகள்' அனுமதிக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்லாது, இரத்தத்தோடு தொடர்புடைய சிவப்பு மற்றும் வெள்ளை இரத்த அணுக்கள், பிளேட்லெட்டுகள் மற்றும் பிளாஸ்மா ஆகிய எதையும் பரிமாற்றம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இந்த கொள்கையை தீவிரமாய் கடைபிடிக்கும் இந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள் பலர் இதினிமித்தம் உயிரிழந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் மருத்துவ சிகிச்சையை ஏற்றுக்கொள்கிறவர்கள் என்றாலும், இரத்தத்தோடு தொடர்புடைய சிகிச்சைகளை அறவே நிராகரிக்கின்றனர்.. அவ்வாறு இரத்த பரிமாற்றத்தைத் தவிர்த்து வைராக்கியத்தோடு வாழுகிறவர்களே பரலோகத்திற்கு செல்வர் என்று இவர்கள் உறுதியாய் நம்புகின்றனர். இந்த போதனையை மதிப்பிடுவதற்கு முன்பு யேகோவா சாட்சிகளைக் குறித்து நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

**'யேகோவா சாட்சிகள்' எப்போது துவங்கப்பட்டது?** 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சார்லஸ் ரஸ்சல் (1852-1916) என்பவரால் பெனிசில்வேனியாவில் யேகோவா சாட்சிகள் இயக்கம் துவங்கப்பட்டது. அட்வண்டிஸ்ட் இயக்கத்தின் அங்கத்தினராயிருந்த இவர் அதிலிருந்து பிரிந்து **"யேகோவா சாட்சிகள்"** என்ற இயக்கத்தை 1870 ஆம் ஆண்டு துவங்கினார். சிறு வேதபாட வகுப்பிலிருந்து துவங்கி, ஸ்தாபனமாய் உருவெடுத்தது.

இவர்கள் கிறிஸ்துவை தேவனுக்கு சமமானவர் இல்லை என்றும் தேவனால் படைக்கப்பட்ட படைப்பு என்றும் போதிக்கின்றனர். சகலமும் அவராலும் அவருக்காகவும் உண்டாக்கப்பட்டது என்ற வேதத்தின் வெளிப்படையான போதனைக்கு இது முற்றிலும் புறம்பான போதனை. இந்த தவறான போதனையில் தங்கள் அஸ்திபாரத்தை ஏற்படுத்திக் கொண்ட யேகோவா சாட்சிகள் ஸ்தாபனம், 240 நாடுகளில் கோடிக்கணக்கானோரை தன்வசம் ஈர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அடிப்படை போதனையில் பிழைகண்ட யேகோவா சாட்சிகளின் பல நம்பிக்கைகளில், கொடி வணக்கத்தைத் தவிர்ப்பது, பண்டிகை கொண்டாட்டங்களை புறக்கணிப்பது போன்றவைகள் உள்ளடங்கும். அவைகளில் ஒன்றுதான் இரத்த மாற்றத் தடை. இதைக் குறித்து மட்டும் இக்கட்டுரை விவாதிக்கிறது.

இரத்த பரிமாற்றம் செய்துகொள்வது வேதத்தின் கட்டளைக்கு புறம்பானது என்பதற்கு லேவியராகமம் 17:10-11 மற்றும் அப்போஸ்தலர் 15:28 வசனங்களை இவர்கள் மேற்கோள் காண்பிக்கின்றனர்.

“இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி, அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டுபோகப் பண்ணுவேன். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே” (லேவி. 17:10–11).

‘‘எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே” (அப்போஸ்தலர் 15:28).

மேற்கண்ட வேத வசனங்களின் அடிப்படையிலேயே, இரத்தம் கொடுப்பதையும் வாங்குவதையும் இவர்கள் தடை செய்கின்றனர். இது முற்றிலும் தவறானதும் ஆபத்துமான ஒரு போதனை. இவர்களின் போதனைக்கு ஆதாரமாய் முன்வைக்கும் லேவியராகமம் 17:10-11 மற்றும் அப்போஸ்தலர் 15:28 ஆகிய இரண்டு வேதப்பகுதிகளையும் இவர்கள் தவறாய் வியாக்கியானம் செய்கின்றனர்.

லேவியராகமம் 17:10-11, இரத்தத்தை புசிப்பதைக் குறித்த நியாயப்பிரமாண விதிமுறை; இரத்த மாற்றத்தை தடைசெய்யும் வேத வாக்கியம் இல்லை. ஆனால் யேகோவா சாட்சிகள் அதை இரத்தப் பரிமாற்றத்திற்கும் தடையான நியாயப்பிரமாணக் கட்டளையாய் கருதுகின்றனர். மிருக ஜீவன்களை பலியிடும் முறைமை வழக்கிலிருந்த பழைய ஏற்பாட்டின் நாட்களில் கடைபிடிக்கப்பட்ட மிக முக்கியமான நியாயப்பிரமாண விதிமுறை இது. மிருக ஜீவன்களை தங்களின் பாவநிவிர்த்திக்காய் பலியிட்ட பின்பு, அவற்றை முழுமையாகவோ அல்லது அதின் பாகங்களையோ, பலியிடுகிறவர் அல்லது ஆசாரியர் புசிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இரத்தத்தை புசிக்க அனுமதிக்கப்படவில்லை. அதற்கு காரணம், “இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது” என்றும், “ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்வது இரத்தமே” என்றும் அவர்கள் உறுதியாய் நம்பியிருந்தனர். பழைய ஏற்பாட்டில் இரத்தமானது, ஜீவனுக்கு அடையாளமாகவும், அனைத்து சடங்காச்சாரங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்பட்டது. அந்த நாட்களில் இரத்தத்தை மாற்றம் செய்யுமளவிற்கு மருத்துவ வளர்ச்சி ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்த வசனங்கள் இரத்த மாற்றத்தை தடைசெய்யும் நேரடியான வேத வாக்கியங்கள் அல்ல என்பது புலனாகிறது.

அவர்கள் தங்கள் போதனைக்கு ஆதாரமாய் பயன்படுத்தும் மற்றுமொரு புதிய ஏற்பாட்டு வாக்கியம், அப்போஸ்தலர் 15:28. இந்த வசனம், இரத்தத்திற்கு விலகியிருக்கவேண்டும் என்று எச்சரிக்கிறது. ஆனால் இந்த வேதப்பகுதி, புறஜாதிகளிடத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு யாக்கோபு சொல்லும் ஆலோசனை (வச.19). குறிப்பாய், அந்தியோகியா, சீரியா மற்றும் சிலிசியா போன்ற தேசங்களிலிருந்து கிறிஸ்துவுக்குள்ளாய் இரட்சிக்கப்படுகிற புறஜாதி மக்களுக்கு, அவர்கள் தங்கள் மார்க்கத்தின் விக்கிரக செய்கைகளிலிருந்து முற்றிலும் விலகியிருக்கும் பொருட்டு, யாக்கோபு அவர்களுக்கு நிருபம் எழுதுகிறார். மாம்சத்தோடு இரத்தத்தை புசிக்கும் வழக்கம் புறஜாதியினரிடத்தில் பரலாய் கடைபிடிக்கப்பட்டு வந்ததால், அவர்களின் விக்கிரக செய்கைகளிலிருந்து அவர்களை பிரித்தெடுக்கும் பொருட்டு ஆதி அப்போஸ்தலர்கள் இந்த ஆலோசனையை

அவர்களுக்கு கொடுத்து, பிரித்தெடுக்கப்பட்ட பரிசுத்த ஜீவியத்தின் மேன்மையை அவர்களுக்கு வலியுறுத்தினர். இந்த ஆலோசனையும் லேவியராகமம் 17:10-11-ஐ போன்று இரத்தத்தை புசிப்பதோடே தொடர்புடையது; இரத்தமாற்றத்தை தடைசெய்யும் கட்டளை அல்ல.

யேகோவா சாட்சிகள் தங்கள் போதனைக்கு ஆதாரமாய் முன்வைக்கும் மேற்கண்ட இரண்டு வேத வாக்கியங்களும் இரத்த மாற்றத்தைக் குறித்தது அல்ல; மாறாக, இரத்தத்தை புசிப்பதற்கு பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் விதித்த தடையே. ஒவ்வொரு நியாயப்பிரமாணமும் ஒரு உலகளாவிய ஒழுக்கக் கொள்கையில் ஊன்றப்பட்டிருக்கும். அந்த வகையில், புறஜாதிகளின் செய்கைகளிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகிய இஸ்ரவேலர்களை பிரித்து காண்பிப்பதே இந்த நியாயப்பிரமாணத்தின் நோக்கம். அதாவது, பரிசுத்தத்தை முன்னிலைப்படுத்தும் நோக்கம். ஆனால் இந்த வேதப்பகுதியை யேகோவா சாட்சிகள், இரத்த பரிமாற்றம் செய்து உயிர்காக்கும் மருத்துவ வளர்ச்சிக்கு விரோதமாய் பயன்படுத்துவது சத்தியத்திற்கும் கிறிஸ்தவ அன்பிற்கும் முரணானது. யேகோவா சாட்சிகளின் இந்த தவறான வியாக்கியானம், எண்ணற்ற உயிர்களை பிரயோஜனமில்லாமல் பலிவாங்கியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

யேகோவா சாட்சிகளின் இந்த போதனைக்கு வித்திட்டது, இயேசு கிறிஸ்துவைக் குறித்த அவர்களின் தவறான புரிதலே. இயேசுவை, பிதாவுக்கு சமமான தேவன் என்று அவர்கள் நம்பவில்லை. அடிப்படை உபதேசத்தில் பிழைகண்ட இவர்கள், நிச்சயமாய் இயேசுவின் சிலுவை தியாகத்தின் மேன்மையை உணர்ந்திருக்க வாய்ப்பில்லை. சிலுவை அன்பின் மேன்மையறியாதவர்கள், தன் இரத்தத்தை சிந்தி, மனிதர்களை மீட்கும் அன்பின் தியாகத்தை பிரதிபலிக்க முடியாது. அது மட்டுமல்லாது, கிறிஸ்துவை பிதாவுக்கு சமமான தேவனாய் கருத மறுக்கும் இவர்களின் போதனைகள் அனைத்தும் சத்தியத்திலிருந்து கிறிஸ்தவத்தை திசைதிருப்ப முயற்சிக்கும் அபாயகரமான முயற்சியே.

ஒருவரை எத்தனை தரம் மன்னிக்கலாம் என்ற கேள்விக்கு, ஏழெழுபது தரம் என்று வரையறையே இல்லாமல் மன்னிக்கக் கற்றுக்கொடுத்த இயேசு, ஒருவருக்கு தன் அன்பை வெளிப்படுத்த எந்த அளவிற்கு போகலாம் என்னும் கேள்விக்கு, தன் இரண்டு கரங்களையும் சிலுவையில் விரித்து ஜீவனைக் கொடுக்க துணியலாம் என்று அதை நிரூபித்துக் காண்பித்தார். அவருடைய சொந்த பிள்ளைகள் என்னும் புத்திர சுவிகாரத்தைப் பெற்ற நாம், மற்றவர்களின் உயிர்காக்கும் இரத்தத்தை தானமாய் கொடுப்பது அன்பின் பிரதிபலிப்பே. அதேபோன்று, சரீர பெலவீனத்தினிமித்தமோ, அறுவை சிகிச்சையின்போதோ, இரத்தத்தை உடலில் செலுத்திக்கொள்வதோ மருத்துவ வளர்ச்சியின் அங்கமாய் பார்க்கப்படவேண்டுமே தவிர, அவிசுவாச செயலாய் பார்க்கப்பட வேண்டியதில்லை.

தேவனை விசுவாசிக்கும் ஒரு விசுவாசி பூமியில் எப்படி வாழவேண்டும் என்று ஒரு மாதிரியை தேவன் ஏற்படுத்துவதற்காகவே தன்னுடைய ஒரே பேறான குமாரனை பூமிக்கு அனுப்பினார். இயேசுவின் சாயலைத் தரித்துக்கொள்வதே நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இலக்கு. தன்னைப் போல் பிறரை நேசிக்கவும், பகைஞர்களை மன்னிக்கவும் கற்றுக்கொடுத்த இயேசுவின் ஜீவியத்தை நம் கண்களுக்கு முன்பாக நிறுத்தி, தியாகமான கிரியைகளின் மூலம் கிறிஸ்துவை அடையாளப்படுத்த நாம் பிரயாசப்படுவோம்.



# இதை நினைத்து புருஷனாயிருங்கள்

## Remember this, and Show yourselves MEN


**Rev. R.தாசையா**

தேனி மண்டல தலைமைப் போதகர்


அன்பானவர்களே! ஆண்டவர் இயேசுவின் வருகையின் அடையாளங்கள் நிறைவேறி கொண்டிருக்கும் இந்த காலத்தில், நமது தேசம் ஓர் வித்தியாசமான சூழ்நிலைக்கு நேராய் சென்று கொண்டுள்ளது. எங்கு பார்த்தாலும் சிலை வணக்கம், அந்நிய தெய்வங்களின் பெருக்கம், அவைகளை பணிந்துகொள்ளும் கூட்டம் பெருகிக்கொண்டே போகும்நிலை, களியாட்டுக்களில் ஈடுபடும் திரள்கூட்டம் , விக்கிரக கோயில்களின் பெருக்கம், இவைகளைக் காணும்போது, ஓர் உண்மையான கிறிஸ்தவனுக்கு சில நேரங்களில் சோர்வு வந்துவிடும். விக்கிரகங்கள் ஒழியட்டும் என்று ஜெபிக்கிறோம். ஆனால் பெருகுகிறதே! விக்கிரகங்களை வழிபடும் மக்களின் வழிபாடு நிறுத்தப்படட்டும் என்று மன்றாடுகிறோம். ஆனால் கோயில்களில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறதே! புதிய புதிய கடவுள்கள், புதிய புதிய கோயில்கள் உருவாகிக்கொண்டே இருக்கிறதே! மக்கள் இயேசுவிடம் வருவதற்கு இவைகள் தடைகளாக இருக்கிறதே என்று நாம் எண்ணும்போது, நமது விசுவாசத்தில் ஓர் தடுமாற்றம் ஏற்படலாம். இந்த சூழ்நிலையில் இருக்கும் நமக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் திருவார்த்தை ஓர் விழிப்புணர்வை தருகிறது. ஏசாயா 46:8-ல் **“இதை நினைத்துப் புருஷராயிருங்கள்;... இதை மனதில் வையுங்கள்”** என்று வாசிக்கிறோம். புருஷராயிருங்கள் என்கிற பதம் சில ஆங்கில மொழி பெயர்ப்புகளில், **தைரியமாயிருங்கள் (BE BRAVE); உறுதியாயிருங்கள் (BE ASSURED, STAND FIRM)** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் எவைகளை நினைத்துப்பார்த்து புருஷர்களாய், தைரியமாய், உறுதியாய் இருக்க வேண்டும் என்று இந்த அத்தியாயத்தில் காண்போம்.

### முந்தி பூர்வ காலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்
### Remember the former things from ages past

இதை நினைத்துப் புருஷராயிருங்கள், பாதகரே, இதை மனதில் வையுங்கள் (ஏசாயா 46:8). முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள் (ஏசாயா 46:9).

விக்கிரகங்கள் பெருகி வரக்கூடிய இக்காலக் கட்டத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய மற்றும் மனதில் நிறுத்தி வைக்க வேண்டியவைகளைக் குறித்து தியானிப்போம்.

### தேவனின் தனித்துவமான தன்மையை நினைத்துப் பாருங்கள்
### Remember the distinctive nature of God

ஏசாயா 46:9-ல் “முந்தி பூர்வ காலத்தில் நடந்தவைகளை நினையுங்கள், நானே தேவன் வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்கு சமானமில்லை” என்று தேவன் கூறுகிறார். இந்த அதிகாரம் முழுவதும் சொல்லப்பட்டுள்ள “தேவனுக்கும் மற்ற விக்கிரகங்களுக்கும் இடையேயான ஒப்பீடு” **தேவனின் தனித்தன்மையை உரக்க பறைசாற்றுகிறது. தேவனின் தனித்தன்மை அவரது குணாதிசயத்திலும் (CHARACTER) அவரது செயல்களிலும் (ACTS) காணப்படுகிறது.**

**தேவன் தம்முடைய ஜனங்களின் மீது காட்டும் தொடர்ந்தேட்சியான பரிவும் கரிசனையும் தேவனின் தனித்துவமான குணாதிசயங்களாகும்.** நம்முடைய தேவனே சிருஷ்டி கர்த்தா. ''வானங்களை சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காக செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; நானே கர்த்தர், வேறொருவரும் இல்லை" (ஏசாயா 45:18). ஆனால் விக்கிரகங்கள் மனிதனின் கைவேலைப்பாடுகளே. "பையிலிருக்கிற பொன்னைக் கொட்டி, வெள்ளையைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலி பொருத்திக் கொள்ளுகிறார்கள். அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான். அதை வணங்கி பணிந்து கொள்ளுகிறார்கள்" (ஏசாயா 46:6).

பொன்னினால், வெள்ளியால், மரத்தால், உலோகத்தால், மண்ணால், கல்லால் அவைகள் உண்டாக்கப்பட்டாலும் அவைகளை மனிதன் சுமக்கிறான்; **நம்முடைய தேவனோ நம்மை சுமக்கிறார். தாயின் கர்ப்பத்தில் உருவான நாள் முதல் முதிர்வயது வரைக்கும் தாங்குகிறார். இதுவரை சுமந்தவர் இனிமேலும் சுமப்பார்.**

விக்கிரகங்கள் மனிதனின் வேண்டுதலுக்கு பதில் தராது. அது அவன் இக்கட்டை நீக்குவதில்லை. அவனை இரட்சிக்கிறதுமில்லை (ஏசாயா 46:7) ஆனால் **நமது தேவனோ வேண்டுதலுக்கு பதில் தருகிறார், நமது இக்கட்டை நீக்குகிறார்.** என் நீதியைச் சமீபிக்கப்பண்ணுவேன்; என் இரட்சிப்பு தாமதிப்பதில்லை; நான் சீயோனுக்கு என் இரட்சிப்பையும், இஸ்ரவேலுக்கு என் மகிமையையும் கட்டளையிடுவேன் (ஏசாயா 46:13) என்கிறார் நம் தேவன்.

விக்கிரகங்கள், அவைகள் வைக்கப்பட்ட ஸ்தானத்தை விட்டு அசையாது (ஏசாயா 46:7). தானும் ஏதும் செய்யாது. தன்னை வணங்குகிறவர்களுக்கும் எதுவும் செய்ய திராணியில்லாதது. ஆனால் நம் தேவனோ ''அந்தத் திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்" (ஏசாயா 46:9,10) என்கிறார். அவரே தேவன் வேற தெய்வம் இல்லை அவருக்கு சமானமில்லை.

பூர்வ காலத்தில் தேவன் அந்நிய தெய்வங்களை முறியடித்தார். எகிப்திய தெய்வங்களை தேவன் அதம் பண்ணினார். அதன்மேல் தமது நீதியை வெளிப்படுத்தி, தேவ ஜனத்துக்கு மீட்பை தந்தார் (யாத்.12:12;14:13,14).

பேல் பணியும், நேபோ குனியும்-இவை பாபிலோனிய தெய்வங்கள், இவைகளுக்கு ஒரு தீர்ப்பை தேவன் வைத்திருக்கிறார். அவைகள் சிறைப்பட்டுப்போகும் காலம் வரும் (ஏசாயா 46:1,2) அதுதான் சிலை திருட்டு, சிலை கடத்தல், எங்கோ பதுக்கி வைக்கப்படுகிறது) பெலிஸ்திய தெய்வமான தாகோனின் சிலை கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக விழுந்து கிடந்தது (1 சாமு.5:4). பூர்வத்தில் நடந்த இவைகளை தேவன் நமக்கு நினைப்பூட்டி இதை நினைத்து புருஷராயிருங்கள். இதை மனதில் வையுங்கள் என்று தேவன் உரைக்கிறார். **அந்நிய வல்லமை, பிசாசின் கிரியை, விக்கிரக பெருக்கம், திருவிழாக்கள், புது புது கடவுள்கள் உண்டாகும்போது அதைக்கண்டு பெரிதாக எண்ணாமல், நமது தேவனின் மகத்துவத்தை கண்டு நாம் பெருமிதம் கொள்ளும் திட மனது நமக்கு தேவை.**

- தொடரும்.

# பரிசுத்த ஆவியானவர்

## 1. பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள்

வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவருக்குக் குறிப்பிட்ட சிறப்பு அடையாளங்களை பயன்படுத்தினர். ஏனென்றால் அவைகள் பல வார்த்தைகள் சொல்வதைக் காட்டிலும் அவரைப்பற்றி அதிக விளக்கங்களைத் தருகிறது.

**1. அக்கினி** (அப்.2:3)

விசுவாசிகளின் வாழ்வில் சுத்திகரிக்கும் சக்தியையும் வல்லமையையும் சொல்கிறது. (அப்.2:3; ஏசாயா 6:1-7). அக்கினி வெளிச்சம் காட்டுகிறது (சங்கீதம் 78:14).

**2. காற்று** (யோவான் 3:8)

காற்று அவரின் வல்லமையான புதுவாழ்வூட்டும் சக்தியைச் சொல்கிறது. காற்று அதன் விளைவுகளில் ஆற்றல்மிக்கதாயும், அதன் பலன்கள் பார்க்கக்கூடியதாகவும் இருக்கிறது.

**3. தண்ணீர்** (யோவான் 7:37-39)

தண்ணீர் ஆவிக்குரிய வாழ்க்கையில் விசுவாசிகள் நிரம்பி வழிய ஊற்றப்படுகிற அவரது வல்லமையைப் பற்றிப் பேசுகிறது (எபிரெயர் 10:22; சங்கீதம் 46:4).

**4. முத்திரை** (எபேசியர் 1:13)

விசுவாசிகளின் மேல் அவருக்குள்ள உரிமையைச் சொல்கிறது.

**5. எண்ணெய்** (அப்.10:38)

எண்ணெய் ஊழியத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட அவரின் வல்லமையைச் சொல்கிறது. எண்ணெய் சுகமாக்குகிறது (வெளி.3:18). மட்டுமல்லாமல் ஆறுதல்படுத்துகிறது.

**6. புறா** (மாற்கு 1:10).

புறா, அவரின் கனிவான மென்மையான அமைதியான பண்பைச் சொல்கிறது.

## 1. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்

விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பின்வருமாறு கிரியை செய்கிறார்.

1. பாவத்தைக்குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:9).
2. தேவ அன்பை நம்மில் ஊற்றுகிறார் (ரோமர் 5:5).
3. நமக்கு ஜெபிப்பதற்கு உதவி செய்கிறார் (ரோமர் 8:26; எபே.6:18; அப். 4:23,24).
4. விசுவாசிகளைப் புதிதாக்குகிறார் (யோ.3:5; தீத்து 3:5).
5. விசுவாசிகளுக்குள் வாசம் செய்கிறார் (ரோமர் 8:11; 1கொரி.6:19).
6. விசுவாசிகளை முத்திரை போடுகிறார் (எபே.1:13,14).
7. நம்மை ஒன்றுபடுத்துகிறார் (1கொரி.12:13).
8. விசுவாசிகளை நிரப்புகிறார் (எபே.5:18).
9. சாட்சிகளாய் மாறுவதற்கு வல்லமையும், தைரியமும் தருகிறார் (அப்.1:8;4:31; 6:9;10).
10. விசுவாசிகளை வழிநடத்துகிறார் (ரோமர் 8:14).
11. விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:1-11).
12. நம்மை ஆராதனை செய்ய வழிநடத்துகிறார்.
13. அவருடைய கனிகளை நம்மிலே வளரச் செய்கிறார்.
14. நம்மை ஆறுதல்படுத்தி, ஊக்குவிக்கிறார்.
15. கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை ஆர்வப்பட வைக்கிறார் (ரோமர் 8:23; வெளி.22:20).

## 3. ஆவியானவருக்கு விரோதமான பாவங்கள்

1. பரிசுத்த ஆவியை தூஷித்தல் (மத்.12:31,32).
2. பரிசுத்த ஆவியை எதிர்த்து நிற்பது (அப்.7:51).
3. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவது (எபே.4:30,32).
4. பரிசுத்த ஆவியை அவித்துப்போடுவது (1தெச.5:19).
5. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வது (அப்.5:3)

## 4. பரிசுத்த ஆவியின் கனிகள்

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23).

## 6. பரிசுத்த ஆவியின் வரங்கள் (1கொரி.12:8-10)

1. ஞானத்தைப் போதிக்கும் வரம்.
2. அறிவை உணர்த்தும் வரம்.
3. விசுவாசம்.
4. குணமாக்கும் வரம்.
5. அற்புதங்களைச் செய்யும் வரம்.
6. தீர்க்க தரிசனம் உரைக்கும் வரம்.
7. ஆவிகளைப் பகுத்தறியும் வரம்.
8. பற்பல பாஷைகளைப் பேசும் வரம்.
9. பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம். வாசிக்கவும் : மாற்கு 16:17-18; ரோமர் 12:6-8; எபேசியர் 4:8-13; 1பேதுரு 4:10-11).



தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# யாக்கோபைப் போல

Rev. A.ஞானசேகரன்
சென்னை மண்டல ஆண்கள் ஐக்கியத் தலைவர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துதல் தெரிவித்து எழுதுவது. கலா.2:9-ல் ஆண்கள் சபையின் தூண்கள் என்று பவுல் சொல்வதை பார்க்கிறோம். அமெரிக்காவில் அசுசா தெருவில் சிறு குழுவில் தொடங்கிய அசெம்பிளி ஆப் காட் சபை உலகமெங்கும் படர்ந்து காணப்படுவது போல சுமார் 15 ஆண்டுகள் முன்பாக தமிழ்நாடு அசெம்பிளி ஆப் காட் ஸ்தாபனத்தில் சிறு குழுவாக ஆரம்பிக்கப்பட்ட ஆண்கள் ஐக்கிய ஊழியம் இன்று தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அசெம்பிளி ஆப் காட் சபைகளில் ஆலமரம்போல படர்ந்து விரிந்து வேரூன்றி நிற்பதுபோல மேலும் யோசேப்பின் கொடி சுவரின்மேல் படர்ந்து போவதுபோல இன்னும் இந்தியா முழுவதுக்கும் படர்ந்துபோக இருப்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கெல்லாம் அடித்தளம் ஜெபம்.

ஜெபம் தேவனோடு பேசுவது, ஜெபம் இல்லையென்றால் கூரையில்லாத வீடுபோல் இருக்கும். மத்.6:9-ல் ஜெபத்தை கற்றுத்தந்தவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. ஜெபத்தை கற்றுத் தந்தவராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் அஸ்திபாரத்தைப் போட்டுக் கட்டும்போது மத்.7:24-ல் பெருமழை, பெருங்காற்று, பெருவெள்ளம் மோதினாலும் அது விழாது.

## தனிப்பட்ட வாழ்க்கையில் யாக்கோபு

தனிப்பட்ட வாழ்க்கையின் ஜெபத்திற்கு இயேசு தான் நமக்கு முன்மாதிரி. மாற்கு 1:35-ல் அதிகாலை இருட்டோடே எழுந்து ஜெபம் பண்ண வனாந்திரமான இடத்திற்குப் போனார். அதேபோல ஆதி.32:24-ல் இங்கே ஒரு புருஷன் (யாக்கோபு) பொழுது விடியுமளவும் தேவ தூதனோடு போராடுகிறான். பிறகு ஆதி.32:25 முதல் 28 வரை தேவனோடு போராடுகிறான். போராடி இருவரையும் மேற்கொண்டான்.

## ஏன் போராடினான்?

தன்னை ஆசீர்வதிக்கும்படி, கர்த்தர் தருகிற ஆசீர்வாதம் வேறு, ஏற்கெனவே மாமனார் வீட்டிலிருந்து கொண்டுவந்த ஆசீர்வாதம் இருக்கிறது. ஆனால் கர்த்தர் தருகிற ஆசீர்வாதமே ஐஸ்வரியத்தை தரும். அதனோடே வேதனையைக் கூட்டார். தன் பாவங்களை அறிக்கையிட்டான். அங்கே அவனை இஸ்ரவேல் என்று ஆசீர்வதித்தார். இந்த ஜெபத்தின் மூலமாக இஸ்ரவேல் என்னும் தேசம் ஸ்தாபிக்கப்பட்டது. எஸ்தர் 9:1-ல் எஸ்தர், மொர்தெகாயின் ஜெபம் பகைவர்களை மேற்கொள்ள வைத்தது. ஒரு விவசாயிக்கு 4 ஆடுகள் இருந்தது, அதில் 3 கொழுத்தவைகள், ஒன்று நோஞ்சான் மாதிரி இருந்தது. ஆனால் இந்த நோஞ்சான் ஆட்டின் எலும்பு வலுவாக இருந்தது. அந்த விவசாயி இந்த 4 ஆடுகளையும் மேய்ப்பதற்கு காட்டுக்கு ஓட்டிசென்றார். ஆடுகள் மேய்ந்துகொண்டு இருந்தபோது, ஒரு ஓநாய் மேற்கொள்ள வந்தது, இந்த 3 கொழுத்த ஆடுகளும் ஓநாயைப் பார்த்து பயந்து ஓடி விட்டது. நோஞ்சான் ஆட்டின் எலும்பு நல்ல வலுவாக இருந்ததால் ஓநாயை எதிர்த்து அதை மேற்கொண்டது. ஓநாய் ஓடிப்போய் விட்டது. காரணம் எலும்பு நல்ல வலுவாக இருந்தது. ஏன் எலும்பு நல்ல வலுவாக இருந்தது? எரே.15:16 வார்த்தை கிடைத்த உடன் அதை உட்கொண்டேன்.

அந்த வார்த்தை எலும்பில் போய் அடைப்பட்ட அக்கினியாய் இருந்தது (எரே.20:9). வார்த்தையினால் சாத்தானை மேற்கொள்ள முடியும் (வெளி.12:11). ஒரு மணி நேர ஜெபத்தினால் மாம்சத்தை ஜெயிக்க முடியும் (மத்.26:41). ஒவ்வொரு புருஷரும். தனித்து ஜெபிப்போமா ? ஜெயம் கொள்வோமா ?

## குடும்ப வாழ்வில் யாக்கோபு

ஆதி.35:1 தேவன் யாக்கோபை நோக்கி நீ எழுந்து பெத்தேலுக்குப்போய் உனக்கு தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார்.

பலிபீடம் தேவனையும் மனிதனையும் இணைக்கும் இடம். ஆதி.12:8 தேவன் தனக்கு காண்பித்த இடத்துக்கு ஆபிரகாம் வந்துபோது. அங்கே பலிபீடம் கட்டி கர்த்தரை தொழுது கொண்டான். ஜெபம், துதி, ஆராதனை நம்மை தேவனோடு இணைக்கிறது.

தேவனை சந்திக்கப் போகிறோம். ஆதலால் ஆதி.35:2 உங்கள் அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு உங்களை சுத்தம் பண்ணிக்கொண்டு உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் என்று கூறி தன் குடும்பத்தை யாக்கோபு சுத்திகரித்தான் ஆதி.35:4, குடும்பத்தில் உள்ளவர்கள் தங்கள் அந்நிய தெய்வங்கள் மற்றும் காதணிகளை கழற்றி யாக்கோபிடம் கொடுத்தார்கள், அவைகளை யாக்கோபு ஒரு கர்வாலி மரத்தின் கீழ் புதைத்தான்.

ஆதி.35:5 பரிசுத்தத்திற்கு கிடைத்த வெற்றி யார் இவர்களை அழிக்கலாம் என்று நினைத்தார்களோ, அவர்களை சுற்றிலும் இருந்தவர்களுக்கு தேவனாலே பயங்கரம் உண்டாயிற்று. யாக்கோபின் குடும்பத்தை அழிக்கலாம் என்று இருந்த சீகேம் ஊரார் யாக்கோபை பின் தொடராதிருந்தார்கள். நீங்கள் பரிசுத்தமாய் வாழும்போது எந்த சாபமும் வியாதியும் உங்களை பின் தொடராது.

ஒரு சமயம் சாதுசுந்தர் சிங்கை சில மந்திரவாதிகள் சூழ்ந்துகொண்டு உங்கள் கையில் இருக்கிற வேதாகமத்தை கீழே வையுங்கள், உங்களை எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கூறியதும், அவர் தனது வேதாகமத்தை கீழே வைத்துவிட்டார். பிறகு மந்திரத்தை ஏவி விட்டார்கள், அப்படியும் ஒன்றும் செய்ய முடியவில்லை. உங்க பையில் இருக்கிற வசனத்தை எடுத்து கீழே வையுங்கள் என்றார்கள், அதையும் எடுத்து வைத்தார். பிறகு மந்திரத்தை ஏவினார்கள். அவர்களால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் அவருக்குள் இருப்பவர் பரிசுத்தர். அவர் உலகத்தில் இருப்பவனிலும் பெரியவர். ஆம் பிரியமானவர்களே நாம் பரிசுத்தமாய் வாழும்போது எந்த தீய சக்தியும் ஒன்றும் செய்ய முடியாது.

## சபையில் யாக்கோபு

யாத்.12:47 இஸ்ரவேலின் 12 கோத்திரங்களும் வனாந்திரத்திலே சபையாக கூடி பஸ்காவை ஆசரித்தார்கள்.

எண்.1:2,3 யுத்தத்திற்கு போவதற்கு சபையாக கூடி வீட்டிற்கு ஒரு நபரை தெரிந்து கொண்டார்கள்.

எண்.23:9 அவர்கள் வனாந்திரத்திலும் எந்த ஜாதிகளோடும் கலவாமல் பரிசுத்தமாய் வாழ்ந்தார்கள். அந்த ஜனங்கள் ஜாதிகளோடு கலவாமல் தனித்து வாசமாயிருப்பார்கள்.

உபா. 33:28 யாக்கோபு தனித்து வாசம்பண்ணுவான்.

எண்.24:1,2 இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே பாளையம் இறங்கி

இருக்கிறதை பிலேயாம் பார்த்தான். அந்த பாளையம் (சபையார்) ஒரு சிலுவை வடிவத்தில் இருந்தது. சர்வ வல்லவர் அவர்களோடு இருக்கிறார் என்பதை பார்த்தபோது தாழ விழுந்து விட்டான்.

சபிக்க வந்தவன், தேவனுக்கு இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே பிரியம் என்று கண்டான்.

எண்.24:5 யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்.

ஒரு சமயம் ஒரு ஊழியர் இந்தோனேஷியாவில் உள்ள ஒரு சபைக்கு பிரசங்கம் பண்ணபோய் இருந்தார். அவரை அழைத்த சபை போதகர் ஐயா, நீங்க அபிஷேகம் பெற்றிருக்கிறீர்களா? என்று பிரசங்கம் பண்ணிக்கொண்டு இருக்கும்போது, ஓடி வந்து கேட்டார். ஏனைய்யா ? உங்களுக்கு மந்திரம் செய்ய, 7 மந்திரவாதிகள் சபையில் பின் வரிசையில் உட்கார்ந்து இருக்கிறார்கள். அதற்கு அந்த ஊழியர் நீங்கள் கவலைப்படாதீர்கள், இயேசுவின் இரத்தம், அவருடைய அபிஷேகம், என்மேல் இருக்கிறது. அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் தைரியமாய் இருங்கள் என்று கூறினார்.

எண்.23:21 ராஜாவின் ஜெய கெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது. பிலேயாமால் அவர்களை சபிக்க முடியவில்லை. அவர்கள் தேவனாகிய கர்த்தர் அவர்களோடு இருக்கிறார்.

புருஷர்களாகிய நீங்களும் நானும் யாக்கோபைப்போல தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சபை வாழ்க்கையிலும் ஜெபித்து பரிசுத்தமாய் வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்துவோமா...

---

**தாய்மார்கள் தினம்**

மே 11, ஞாயிறு




**தகப்பனார்கள் தினம்**

ஜூன் 15, ஞாயிறு




**தமிழ் பிரதேசத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்**




**பெந்தெகொஸ்தே நாள்**

ஜூன் 08, ஞாயிறு

**திருச்சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்**




அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

தேவனுடைய சுத்தக் கிருபையால் நம்மையும், நம்முடைய ஊழியங்களையும், சபையையும் தேவன் ஆசீர்வாதமாய் நடத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை!

கடந்த இதழில் நாம் தியானித்தபடி நேர்த்தியான பங்கு என்பது கிறிஸ்துவினிடத்தில் நாம் பங்குள்ளவர்களாய் இருப்பதே. அதைத் தொடர்ந்து எபிரெயர் 12:10-ம் வசனத்தின்படி

> *அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.*

கிறிஸ்துவினுடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாய் மாறவேண்டும். கிறிஸ்துவின் பரிசுத்தத்தில் பங்குள்ளவர் யார்?

## 1. அகற்றி

ஏசாயா 1:16-ன் கர்த்தருக்கு முன்பாகக் காணப்படும் பொல்லாப்பை நாம் அகற்றும்போது, அவருடைய பரிசுத்தத்திற்குப் பங்குள்ளவர்களாய் மாறுவோம். இஸ்ரவேல் பாளையத்திலிருந்து ஆகானும், ஆகானுடையவைகளும் அகற்றப்படும்போது சுத்திகரிப்பு உண்டாகும். அப்பொழுது தேவ ஜனங்களுக்குத் தேவத்திட்டமும், எளிதாக ஜெயமும் உண்டாகும். இந்நாட்களில் நாம் வாழ்வில் தேவனுக்குப் பிரியமில்லாதவைகளை நம்மிலிருந்து அகற்றக் கிருபை தருவாராக.

## 2. விலகி

அப்.2:40-ன் படி நாம் மாறுபாடான காரியங்களுக்கு விலகி இருப்போமானால் பரிசுத்தத்துக்குப் பங்குள்ளவர்களாய் இருப்போம். தானியேலும் அவனோடு இருந்த விசுவாச சகோதரர்களும் ராஜ போஜனத்தால் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் அவர்களைக் காத்துக்கொள்ளத் தீர்மானித்ததுபோல, நாமும் தீர்மானம் உள்ளவர்களாய் இருப்போமானால் தேவனுடைய பரிசுத்தத்துக்குப் பங்குள்ளவர்களாய் இருப்போம்.

## 3. காவல்வைத்து

நாகூம் 2:1-ன் படி சிதறடிக்கிறவன் வரும்போது காவல்வைத்து வழியைக் காத்துக்கொள்ள வேண்டும். எதிராளியாகிய பிசாசானவன் நம்முடைய

பரிசுத்தத்துக்குக் கேடுண்டாக நினைக்கும் எவ்விதக் காரியத்திலும் நாம் காவல் வைத்து கவனமாய் இருந்து நமது பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். நெகேமியா அலங்கத்தைக் கட்டும்போது, ஒருபுறம் அலங்கம் கட்டினாலும், மறுபுறம் அதைத் காத்துக்கொள்ளவும் கவனமாய் இருந்தான். அதுபோல இக்காலங்களில் நாம் கிறிஸ்துவுக்குள் வளருகிறது எவ்வளவு முக்கியமோ அதுபோல நம்முடைய ஜீவியங்களைக் காத்துக்கொள்ளவதும் மிகவும் அவசியம்.

இக்கடைசிக் காலத்தில் தேவன் தமது கிருபையினால் நாம் அகற்றவேண்டியவைகளை அகற்றவும், விலகியிருக்க வேண்டியவைகளுக்கு விலகியிருக்கவும், காத்துக்கொள்ள வேண்டியவைகளை காத்துக்கொள்ளவும் கர்த்தர் தாமே கிருபை பாராட்டுவாராக. நாம் நேர்த்தியான இடங்களில் பங்குள்ளவர்களாய் மாற அதைச் சுதந்தரிக்கக் கர்த்தர் கிருபை செய்வாராக.



**கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!**

---

20-ம் பக்க தொடர்ச்சி

பின்பு தேவனின் வழிநடத்துதலின்படி 1995ஆம் ஆண்டு ஏப்ரல் 30ம் தேதி என்.ஜி.ஓ காலனியில் **சீயோன் ஏ.ஜி. சபையை** ஒரு வாடகை வீட்டில் ஆரம்பிக்க தேவன் உதவினார். பிரதிஷ்டை ஆராதனைக்குப்பின் அன்று மாலை நடந்த ஆராதனையில் ஒரு குடும்பம் மட்டுமே கலந்துகொண்ட நிலையில் விசுவாசத்தை மட்டும் ஆதாராமாக வைத்து ஊழியத்தை வளர்த்தெடுக்க தேவன் உதவினார். பின்பு வீட்டின் மாடியில் ஓலைக் கூரைப்போட்டு நடத்தப்பட்ட நிலையில் அங்கும் இடம்போதாமல்போக, தேவனே ஒரு சொந்த இடத்தை வாங்க கிருபை தந்தார். மிகச்சாதாரணமாய் கட்ட நினைத்த ஆலயத்தை தேவனே தமது பெசலெயேல் போன்ற தாசர்கள் மூலமாக அருமையாகக் கட்ட உதவினார். அநேக முழுநேர, பகுதிநேர ஊழியர்களை உருவாக்கி, சபையை ஒரு பயிற்சிப் பட்டறையைப் போல மாற்றினார். **"பதவியல்ல பரமனின் அழைப்பே மேலானது"** எனக் கருதினார். சிறந்த சிந்தனையாளர், பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டவர், எதிர்பாரா பெரும் சாவல்களை வாழ்வில் கண்டவர்; கர்த்தரால் முற்றுமுடிய ஜெயத்தையும் கண்டவர்.

கனத்துக்குரிய **போதகர் சங்கை ஆபிரகாம் தாமஸ்** அவர்களின் பரிந்துரையில் பேரில் நமது ஸ்தாபன பத்திரிக்கையான "**பரிபூரண ஜீவன்** பத்திரிக்கை" பணியைப் பெற்று அதனைத் (2005-2011) திறம்பட செய்து ஒரு நல்ல உயர்நிலைக்கு கொண்டுவந்து தங்கத்தலைவர்கள், தலைவர்களின் பாராட்டுக்குரியவரானார்.

கொரோனா காலங்களில் வெகுவாக பாதிக்கப்பட்டு, ஜீவ-மரண போராட்டத்திலும் தேவன் அவர்களை மீட்டு மீண்டும் பயன்படுத்தினார். **எளிமை, தாழ்மை, உதாரத்துவம், தகப்பனின் அன்பு, உண்மை, ஞாபகசக்தி, குடும்ப ஆசீர்வாத போதனை, வாலிபர்களுக்கான நல்லொழுக்கப் போதனை, அர்ப்பணிப்பு, சிறிய பெரிய ஊழியர் என்று வித்தியாசம் பாராமல் பழகுதல், கனப்படுத்துதல், ஜெபவாழ்வு, அன்பளிப்பு ஆகியவை அவர்களின் அடையாளம்.**

போதகர் செல்வின் வில்சன் அவர்கள் தன் இறுதி காலங்கள் வரை தேவபணியை அயராது செய்தவர்; தேவனுக்காக பயன்பட்டவர். "**கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்**" என்ற வசனத்தையே வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்தவர். கடைசியாக பயன்படுத்திய வேதாகமத்தின் முகப்பில் அவர் இவ்வாறு எழுதியிருந்தார்: **"ஊழியர்கள் மரிக்கலாம்; ஆனால் ஊழியங்கள் ஒருபோதும் மரிப்பதில்லை".** அவர்களுடைய மனைவி மற்றும் 4 பிள்ளைகள், மருமக்கள் பேரக்குழந்தைகளுக்காக, ஊழியங்களுக்காக ஜெபிக்க மறவாதீர்கள்.

# PRIDE GOES BEFORE FALL

*(A study from the life of king Uzziah)*

Success can lead to downfall if success is not handled carefully. That's one of the key lessons we learn from the life of King Uzziah in 2 Chronicles 26. God lifted up Uzziah and made him the King of Judah when he was just 16 years old (2 Chronicles 26:1). "He did what was right in the eyes of the Lord, just as his father Amaziah had done He sought God during the days of Zachariah who instructed him in the fear of God" (2 Chronicles 26:5). We come to know three key reasons for the downfall of a person, from the life of king Uzziah.

1. Downfall **COMMENCES** when we become proud.

The Bible says "As long as he sought the Lord, God gave him success"(2 Chronicles 26:5). God helped him (2 Chronicles 26:7) and his fame spread as far as the border of Egypt because he had become very powerful (2 Chronicles 26:8). The Bible records, "But after Uzziah became powerful, his pride led to his downfall (2 Chronicles 26:16a). *Are we becoming proud of our achievements in life?*

2. Downfall **CONTINUES** when we are unfaithful.

King Uzziah began to think that it was because of his own abilities that he was successful. "He was unfaithful to the Lord his God, and entered the temple of the Lord to burn incense on the altar of incense" (2 Chronicles 26:16b). Burning the incense in the temple was the job of the priests but King Uzziah dared to do it. He was disloyal to God by thinking that he could do anything he wanted to do even if it was against God's instructions. *Are we unfaithful and disloyal to God by doing things we are not supposed to do?*

3.Downfall is **COMPLETE** when we are unrepentant.

Azariah the priest and 80 other courageous priests pointed out to King Uzziah his unfaithfulness to God and said, "It is not right to burn the incense to the Lord" (2 Chronicles 26:18a). They asked him to leave the sanctuary and warned him that he would not be honoured by God (2 Chronicles 26:18b). But when he despised the priests' warning and angrily reacted to them, "...leprosy broke out on his forehead" (2 Chronicles 26:19). The Bible says, "...because the Lord had afflicted him" (2 Chronicles 26:20b). *Are we stubborn at times and refuse to set right our ways inspite of God correcting and, warning us?*

- Adapted



# தீர்மானம் எடுத்தல்
## (DECISION MAKING)

**Rev.K. ராஜா**
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

### 10th, 12th முடித்தவர்கள் மேற்படிப்பை தேர்ந்தெடுப்பது எப்படி?

அன்பான மாணவ, மாணவிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

பத்தாம், பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்கள் மேற்படிப்பிற்குச் செல்ல கட்டாயம் COURSE SELECT பண்ணியே ஆக வேண்டும். அதற்கு சரியான ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். தீர்மானம் எடுப்பது சில நேரங்களில் அவ்வளவு எளிதாக இருப்பதில்லை. ஆகவே தீர்மானம் எடுப்பதற்கு உதவியாக சில ஆலோசனைகள்.

### 1. தீர்மானம் என்றால் என்ன?

எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காரியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வாய்ப்புகள் நமக்கு முன் இருக்கும்போது, எதைத் தெரிந்தெடுப்பது என்ற குழப்பம் ஏற்படும். அந்த நேரத்திதல், சரியாக நிதானித்து எடுக்கும் முடிவே தீர்மானம் ஆகும்.

பத்தாம், பன்னிரெண்டாம் வகுப்பு முடித்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு முன்பாக மேற்படிப்பை தெரிந்தெடுப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாய்ப்புகள் இருக்கிறது. ஆகவே, உங்களுக்குத் தேவையான COURSE-ஐ சரியாக தெரிந்தெடுக்க கவனமாக இருங்கள்.

### 2. எப்படி தீர்மானம் எடுக்கக் கூடாது?

- நம்முடைய பெலத்திற்கு மிஞ்சி, அடைய முடியாத காரியங்களை தீர்மானிக்கக்கூடாது.
- உணர்ச்சி வசப்பட்டு, ஆசை வார்த்தைகளை நம்பி தீர்மானம் எடுக்கக்கூடாது.
- மற்றவர்கள் எல்லாரும் எதைத் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதையே தீர்மானமாக எடுக்கக்கூடாது.

10th, +12th முடித்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு தீர்மானம் எடுப்பதில் இப்படிப்பட்ட அழுத்தங்கள் வர வாய்ப்பிருக்கிறது. கவனமாக இருங்கள்.

### 3. தீர்மானம் எடுப்பதின் அவசியம்:

- சரியான பாதையில் செல்ல உதவி செய்யும்.
- அடுத்தடுத்த நிலையில் உயர்ந்து செல்ல உதவி செய்யும்.
- உண்மையான திறமையை வெளிக்காட்ட உதவி செய்யும்.
- தன்னம்பிக்கையில் வளர உதவி செய்யும்.
- அதிகமாக கற்றுக்கொள்ள உதவி செய்யும்.

மனதில் உறுதியான தீர்மானம் இருந்தால் முடியாத காரியமும் முடியக்கூடியதாக அமையும். உறுதியான தீர்மானமும், மனமும் இல்லாதபோது முடியக்கூடியதும் முடியக்கூடாததாக மாறிவிடும்.

**4. எப்படி தீர்மானம் எடுக்க வேண்டும்?**

**A. திறமையின் அடிப்படையில் தீர்மானம் எடுக்க வேண்டும்:**

தேவன் ஒவ்வொருவரையும் திறமையோடு தான் படைத்திருக்கிறார். உங்களுக்கும் ஒரு திறமையை அல்லது திறமைகளை தேவன் தந்திருக்கிறார். அதை எப்படி கண்டுபிடிப்பது என்றால், அந்த திறமைக்கு ஏற்ற விருப்பங்கள் உங்களுக்குள் இருக்கும். உங்களுக்குள் இருக்கும் திறமைக்கு ஏற்ற காரியங்களைச் செய்வது உங்களுக்கு சந்தோஷத்தைத் தரும். உங்கள் திறமை என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள்.

**B. ஜெபத்தோடு தீர்மானம் எடுக்க வேண்டும்:**

வேதாகமத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 12 சீஷர்களை தெரிந்தெடுப்பதற்கு முன் இரவு முழுவதும் ஜெபம் செய்தார் என்று லூக்கா 6:12-14 வசனங்கள் கூறுகிறது. நாம் எடுக்கும் தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவைகள். அவைகள் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். ஆகவே, எதையும் தீர்மானிப்பதற்கு முன்பு உண்மையாய் ஆண்டவரை நோக்கி ஜெபித்து செயல்படுவது நல்லது.

ஆகவே, விடுமுறை நாட்களை வீணாகக் கழித்துவிடாமல், தேவ நடத்துதலின்படி தீர்மானங்கள் எடுக்க விடுமுறை நாட்களைப் பயன்படுத்துங்கள்.

**C. தேவ சித்தத்தின்படி தீர்மானம் எடுக்க வேண்டும்:**

மனம் ஒரு குரங்கு என்று சொல்வார்கள். ஆகவே, மனது ஒரு போதும் திருப்தியடையாது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல, எல்லா இடங்களுக்கும் மனம் ஆசைப்படும். மனதின் உணர்ச்சிக்கு இடம் கொடுத்து எல்லாவற்றிலும் நேரத்தை செலவிட்டு, காலத்தை வீணாக்காதீர்கள். மன உணர்ச்சிகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், உங்களைக் குறித்த தேவ சித்தம் என்ன என்பதை அறிந்து கொண்டு செயல்படுவது தான் ஒரே வழி.

ஆகவே, மாணவ, மாணவிகளே! உங்களைக் குறித்த தேவ சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்ள, தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபம் செய்ய முடிவெடுங்கள்.

**D. நல் ஆலோசனையோடு தீர்மானம் எடுக்க வேண்டும்:**

நமக்குள் இருக்கும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும், அதை வெளிப்படுத்தி வாழ்வில் உயர்வதற்கும் என்னென்ன வாய்ப்புகள் இருக்கிறது என்பது நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு ஏராளமான ஆலோசனைகள் வலைதளங்களில் கொட்டிக்கிடக்கிறது. அவைகளைத் தேடிக் கண்டுபிடித்து அறிந்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம் (SFC) அதனுடைய SFCONLINE என்ற YOUTUBE CHANNEL-ல் மேற்படிப்பிற்கான ஆலோசனை வீடியோக்களை வெளியிட்டுள்ளது. தேவையானால் அவைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வாழ்வின் அடுத்த நிலையில் அடியெடுத்து வைக்கக் காத்திருக்கும் மாணவ, மாணவிகளே! நீங்கள் சரியான தீர்மானத்தை எடுத்து வாழ்வில் உயர்ந்திருக்க உங்களை வாழ்த்துகின்றோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.


**SFC - DISCIPLESHIP TRAINING CAMPS 2025**

**THEME: 'FRAGRANCE (AROMA) OF CHRIST' (2 CORIN 2:15)**

கருப்பொருள் : **'கிறிஸ்துவின் நற்கந்தமாக'** (2 கொரி. 2:15)

2025 ஏப்ரல் 14-ம் தேதி முதல் மே 31-ம் தேதி முடிய

முகாம்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிப்போம் தவறாமல் பங்கு பெறுவோம்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ், எல்லாரும் எப்படியிருக்கிறீங்க. விடுமுறை நாட்களில் நல்லா என்ஜாய் பண்ணுறீங்கனு நினைக்கிறேன். இந்த மாதம் உங்களை ஒரு சூப்பர் ஸ்டோரியோட மீட் பண்ணுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வாங்க வெயிட் பண்ணாம நம்ம கதை உலகத்துக்கு போகலாம்.

தாய் தனக்குச் சோறு போடும்போது ரூபன் அவளது கரங்களையே பார்த்துக்கொண்டிருந்தான். எப்போதும் அப்படித்தான் செய்வான் குஷ்டரோகம் போன்ற அவளது நெளிந்த விரல்களும் வெள்ளையும் கருப்புமான தழும்புகளும் அவனுக்கு அருவருப்பாக தெரிந்தது. கரண்டி இல்லாதபோது, அவள் தன் கையினால் சாதத்தை எடுத்துப் போடும்போது அதைச் சாப்பிட முடியாமல் தவிப்பான். அவளது அரவணைப்பு இவனுக்கு கோபமூட்டியது. அவள் குளிப்பாட்டி விடுவதை வெறுத்தான். அவள் தன்னோடிருப்பதை தன் நண்பர்கள் பார்ப்பதை அவன் விரும்பவில்லை.

அவன் வளர வளர தாயை குறித்த அருவருப்பு எண்ணம் சிந்தனை முழுவதையும் ஆக்கிரமித்தது. ஆயினும் தன் உணர்வுகளைத் தன் தாயிடம் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை. ஒரு நாள் தாங்க முடியாமல் தன் தாயிடம் கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான். தன் தாயை புண்படுத்தாமல் மென்மையாக இனி தனக்கு அவள் கைகளால் சாதம் போடவேண்டாமென சொல்லத் திட்டமிட்டான். ரூபனுக்கு வயது ஆறு யாரும் அவனுக்கு அவனது தாயின் கரங்களைக் குறித்துச் சொன்னதில்லை. இறுதியில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டுவிட்டான்: ‘மம்மி, உங்கள் கைகளுக்கு என்ன ஆனது? ஏதாவது வியாதியா அல்லது என்ன?

அவனது தாய் புன்முறுவல் பூத்தார்கள். ‘நான் உனக்குச் சாதம் போடும்போது நீ முகம் சுளிப்பதை நான் கவனித்தபடியால் நானே ஒரு நாள் உன்னிடம் பேசவேண்டுமென்று இருந்தேன். கதையைக் கேள், இந்த வீட்டிற்கு வருமுன்பாக நாம் ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்தோம். நீ அப்போது ஆறு மாதக் குழந்தை உன்னை பாயில் தூங்க வைத்துவிட்டு மாட்டைக் கவனிக்கச் சென்றேன். திடீரென்று கூக்குரல் கேட்டு ஓடி வந்தபோதுதான் நமது வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். வீட்டைச் சுற்றி பலரும் நின்று நெருப்பை அணைப்பதற்காக தண்ணீரும் மணலும் வீசிக்கொண்டிருந்தனர். நான் உள்ளே பாய்ந்து சென்று உன்னை எடுத்து வர விரும்பினாலும் மக்கள் என்னை அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்கள் பிடியிலிருந்து எப்படியோ என்னை விடுவித்துக்கொண்டு உள்ளே பாய்ந்தேன். நீ படுத்திருந்த பாய் தீப்பற்றத் துவங்கியிருந்தது. உஷ்ணத்தினால் நீ கண்விழித்து அழுதுகொண்டிருந்தாய் உன்னை அணுகும் முன்பாக தீப்பிழம்புகளை அணைக்கவேண்டியிருந்தது. என் கைகளினால் தீயை அணைத்து உன்னைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிவந்தேன்.

வெளியே வந்த பிறகுதான் என் கைகள் வெந்துபோயிருந்ததைக் கண்டேன். ஆனால் நீ பிழைத்துக்கொண்டாய் என்ற நிம்மதி எனக்கு என்னை மருத்துவமனைக்குக் கொண்டுசென்று சிகிச்சை செய்தனர். அறுவை சிகிச்சையும் பெற்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், என் கைகளில் காயங்கள் ஆறினதால் அவற்றைப் பயன்படுத்த முடிகிறது’ என்றார்கள்.

இதற்குள் ரூபனின் கண்களில் நீர் வழியத் துவங்கியிருந்தது. ஏங்கி ஏங்கி அழுதான். தாயின் கரங்களைத் தன் கைகளில் எடுத்து முத்தமிட்டான். 'அம்மா, நான் பார்த்ததிலேயே மிகவும் அழகிய கரங்கள் இவைகள்தான்' என்று சொல்லி தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அவர்களுடைய கரங்களைத் தன் நண்பர்களுக்குக் காட்டித் தழும்புகளின் கதையை விவரித்துக் கூறினான். தாயின்மேல் அவன் கொண்டிருந்த அன்பு அணைகட்ட முடியாததானது தாய் அவனது தலையைக் கோதினாள் அவளது மடி அவனுக்கு மோட்சமாக இருந்தது.

அன்பான தம்பி தங்காய், நம்ம இயேசப்பா நமக்கு செய்ததும் இதுவேதான். நம்மை நரக அக்கினிக்குத் தப்புவிக்கும்படியாக அவர் தமது முகம், கைகள், கால்கள் மற்றும் முதுகைக் காயப்படவும் புண்ணாகவும் ஒப்புக்கொடுத்தார் நமது இதயப்பூர்வமான அன்புக்கு அவர் தகுதியானவர் அன்றோ? இக்கதை வாசித்த நீங்கள் உங்களுக்காக பலியான இயேசுவின் அன்பை எண்ணி நன்றி கூறுவீர்களா? இந்த கிறிஸ்துவின் அன்பை உங்கள் நண்பர்களுக்கு வெட்கப்படாமல் கூறுவீர்களா? வாழ்நாள் முழுவதும் கல்வாரியின் அன்புக்கு கட்டுப்பட்டவர்களாக வாழ தேவன் நமக்கு கிருபையளிப்பாராக.

தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது (1 யோவான் 4:9) .

கிறிஸ்து இயேசுவின் கல்வாரி அன்பை தெரிஞ்சுக்கோங்க! அவர் நம்மை மீட்கத் தான் பலியானார் என்பதை மனசார புரிஞ்சுக்கோங்க!! இந்த மாத சிறுவர் பகுதி உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்களது மேலான கருத்துக்களை, சாட்சிகளை 97503 81784 என்ற வாட்சாப் எண்ணிற்கு தெரியப்படுத்தலாம். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான ஸ்டோரியோடு உங்களை மீட் பண்ணுறேன். டாட்டா.

---

## போட்டி எண் : 10 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | அபிகாயில் | 1 சாமு. 25:3 |
| 2. | சவுல் | 1 சாமு. 9:2 |
| 3. | அப்னேர் | 1 சாமு. 14:50 |
| 4. | யோனாத்தான் | 1 சாமு. 18:1 |
| 5. | அபியத்தார் | 1 சாமு. 23:6 |
| 6. | கோலியாத் | 1 சாமு. 17:23 |
| 7. | கீஸ் | 1 சாமு. 9:1 |
| 8. | தாவீது | 1 சாமு. 16:18 |
| 9. | சாமுவேல் | 1 சாமு. 2:26 |
| 10. | அன்னாள் | 1 சாமு. 1:15 |
| 11. | ஏலி | 1 சாமு. 4:18 |
| 12. | யோவேல் | 1 சாமு.8:2 |
| 13. | கீரியாத்யாரீமிலே | 1 சாமு.7:2 |
| 14. | 1 வருடம், 4 மாதமும் | 1 சாமு.27:7 |
| 15. | ஆற்றைக் | 1 சாமு.30:10 |
| 16. | பழமொழியாயிற்று | 1 சாமு.10:12 |
| 17. | கில்போவா | 1 சாமு.31:1 |
| 18. | பெலிஸ்தருக்கு | 1 சாமு.13:4 |
| 19. | மாற்றானைக் | 1 சாமு.24:19 |
| 20. | ஆகாதவர்களிடத்தில் ஆகாமியம் | 1 சாமு.24:13 |
| 21. | கெபிக்குப் | 1 சாமு.22:1 |
| 22. | ஐம்பதினாயிரத்து எழுபதுபேரை | 1 சாமு.6:19 |
| 23. | சுரமண்டலம் | 1 சாமு.19:9 |
| 24. | கல்லண்டையில் | 1 சாமு.20:19 |
| 25. | கர்த்தருடைய வசனம் | 1 சாமு.3:1 |



# தேர்வு பிள்ளைகளுக்கு பதற்றம் பெற்றோருக்கா???


## Rev. பெகின் சாமுவேல்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தர் இவ்வருடத்திற்கான AGVBS பயிற்சிகளை கடந்த மாதத்தில் நடத்தி உதவி செய்தார். சுமார் 3123 இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 11 நாட்கள் நடந்த பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. ஜெபித்த உங்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன். தொடர்ந்து இந்த மாதத்தில் சபைகளில் நடைபெற இருக்கிற AGVBS ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். நமது AGVBS ஊழியங்கள் வட மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் சபைகளில் நடைபெறும் AGVBS ஊழியங்களில் உற்சாகமாக பங்குபெறுங்கள்.

அன்பான பெற்றோர்களே, பிள்ளைகள் தேர்வுகளை எழுதி தேர்வு முடிவுகளை நோக்கி எதிர்பார்த்து காத்து இருக்கும் நாட்கள் இது. இந்த நாட்களில் பிள்ளைகளைக் காட்டிலும் பெற்றோர்களாகிய நாம் அதிக எதிர்பார்ப்புடன் இருப்பதால் நமக்கு மிக பதற்றம் காணப்படுகிறது. இதைப் பற்றி இந்த இதழில் சற்று பார்ப்போம்.

இன்றைய காலக்கட்டத்தில் தேர்வு முடிவுகள் வெளியாகும்போது, பெற்றோர்கள் அச்சமடைந்து தங்கள் பிள்ளைகளையும் பயமுறுத்தி வாழ்க்கையே மதிப்பெண்களால் தான் என்பதுபோல மன அழுத்தமடைகின்றனர். தேர்வின் மதிப்பெண்கள் தேர்வுக்கான முடிவுகள்தான் அது ஒன்றும் வாழ்க்கைக்கான முடிவு அல்ல.

தேர்வு முடிவுகளை பெற்றோர்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? How should parents approach exam results?

### அதீத எதிர்பார்ப்பு வேண்டாம்

பெற்றோரின் அதீத எதிர்பார்ப்பே அவர்களை பதற்றத்துக்குள்ளாக்குகின்றது. என்ன மதிப்பெண்கள் கிடைத்தாலும் உங்கள் பிள்ளைகள் தனது தனித்தன்மை, ஆர்வம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து தன்னுடைய படிப்பு, வேலை என தெரிந்தெடுக்க உதவ தயராகுங்கள். இது பெற்றோர், பிள்ளைகள் என இரு தரப்பினருக்குமே தேர்வு முடிவுகளைக் குறித்த இறுக்கங்களைக் குறைத்துக்கொள்ள வாய்ப்பளிக்கும்.

### பிள்ளைகளோடு இயல்பாக இருங்கள்

தேர்வு முடிவுகள் வெளியாகும் நாட்கள் நெருங்கும்போது அதைக்குறித்து அடிக்கடி பிள்ளைகளுக்கு நினைப்பூட்டாதீர்கள். அவர்களை இயல்பாக இருக்கவிடுங்கள். அவர்களுடன் ஆக்கபூர்வமான நேரத்தைச் செலவழியுங்கள். தேர்வு எழுதியாயிற்று. இனி முடிவுகளை எதிர்கொள்வதைத் தவிர நம்மால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். பிள்ளைகளுக்கும் உணர்த்த முயற்சியுங்கள்.

## விமர்சிக்காதீர்கள்

பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகளின் மனநிலையை நன்றாகப் புரிந்தவர்கள். அதனால் பெற்றோர்கள் குழந்தைகளிடம் அவர்கள் எடுக்கும் மதிப்பெண்களைக் குறித்து அதிகமாக விமர்சிக்கக் கூடாது. மதிப்பெண் அதிகமாக பெற்றால் பாராட்டுங்கள். சற்று குறைந்துவிட்டால் அதற்காக அவர்களை காயப்படுத்தாதீர்கள். ஆறுதலாக பேசுங்கள். ஒருபோதும் இவைகளை பிள்ளைகளிடம் சொல்லாதீர்கள். (Things not to say after the exam results).

1. I am disappointed in you – நான் ஏமாற்றத்துக்குள்ளாகி விட்டேன்.
2. Your friends got more than you - உன் நண்பர்கள் உன்னைவிட அதிக மதிப்பெண்கள் எடுத்துள்ளனர்.
3. You didn't work hard – நீ கடினமாக உழைக்கவில்லை.

## தேவன் மேல் விசுவாசமாயிருங்கள்

என்ன மதிப்பெண்கள் கிடைத்தாலும் தேவன் என் பிள்ளைகளின் வாழ்க்கையை மிக நேர்த்தியாக நடத்துவார் என்ற விசுவாசத்துடன் இருங்கள். இது உங்களுக்கு ஏற்படும் தேவையில்லாத பதற்றத்தை குறைக்க உதவும். அவர் உங்கள் பிள்ளைகளுக்கு தேவையானதை ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கிறார். அவர் எப்போதும் சிறந்ததையே தருகிறவர். அவருடைய வாக்குத்தத்தங்களை, வார்த்தைகளை பிடித்துக்கொள்ளுங்கள்.

தேவகிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

---

## போட்டி எண் : 10 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: கிரிஜா; பியூலா; இவாஞ்சலின்; ராணி பிளஸிங்; எஸ்தர்; கனகவல்லி; சாந்தி; பிரேமலதா; பிரியா; கலா ராஜம்; T.கலா; மெர்ஸி ராஜம்; புஷ்பவல்லி; அன்னாள்; விஜி; கிறிஸ்டிபாய்; கிறிஸ்டி; ரேஷ்மா; ஏஞ்சல் அனு பிரின்ஸி; E.கலா; K.சாராள்; கோகிலா; மாது; லீதியாள்; சுமதி; மயில்; S.முத்துலெட்சுமி; ஜெயசிலின்; மஞ்சு; பூங்கோதை; ராதாமணி; மகேஷ்வரி; பிரபா; சித்ரா; குளோரி; முத்துகோபால்; |**கடையநல்லூர்**: ஸ்டெல்லா; செல்வி இந்திராணி; செல்வி கண்ணன்; சத்யா சுரேஷ்; டெல்சியா; அபிஷா யூஜின்; வேணி; ஷெலினா; வசந்தி சேகர்; தங்கராஜ்; ஆஷாதேவி; வினோலியா; |**ராதாபுரம்**: ஜெயக்குமார்; ஜெய சாரோன்; ஜெமிமா சாமுவேல்; செல்வபிரியா; அருள்செல்வி; மல்லிகா; பிரேமா அருள்ராஜ்; ஜாஸ்மின்; நித்யா; | **ஸ்ரீ வில்லிபுத்தூர்**: மெசி; ஆபிரகாம்; பாஞ்சாலி; நெல்சன் செல்வராஜ்; அழகு நாச்சியார்; வசந்தா; அபிராமி; வெங்கடவள்ளி; கிருபா; மாதவி; எஸ்தர் இந்திரா; | **சேத்துப்பட்டு**: ஜெபா விஜய்; மாதரசி; லட்சுமி காந்தா; ரெக்ஸி ஈஸ்வரன்; ஜெயராணி; ஷாலினி; ராதா; சுகந்தி பெனடிக்; மரகதம்; ரேணுகா; | **எடப்பாடி**: சத்யா மூர்த்தி; கிருபாகரன்; சுதா திருநாவுக்கரசு; மாலதி சுரேஷ்; அஞ்சலி அரசு; எப்சிபா ஜோயல்; அனுசுயா; ரூத் போவாஸ்; | **தூத்துக்குடி**: புருசிமா; சில்வெஸ்டர்; சந்தோஷ்; ஜெகதீஸ் மேரி; பிரான்சிஸ்; தேவதாஸ்; ரெபெக்காள்; அருள்ஞானம்; |**தேனி**: செண்பகபுஷ்பா ஜேம்ஸ்; கார்த்திகேயாயினி; கிருபா; திரவியச்செல்வி; தபீத்தாள் ராணி; தனம்; | **பெருங்குளம்**: பியூலா ஜோபாய்; பிரைட்சன்; ஜெபாராஜா; கௌசல்யா; அருள்குமார்; ராபின்சன்; |**ஆறுமுகநேரி**: அனிதா; செல்வபிரியா; அனன்சி அருண்; பாக்கியா; கிருபா; ஏஞ்சல்; | **வேப்பங்காடு**: தட்சினி; பிருந்தாஸ்ரீ; கவியரசு; தனுஷியா; மாரிக்கண்ணன்; |**திருநின்றவூர்**: ரோஸ்லின் மேரி; தெரசா; கில்டா; சுகந்தி சாம்சன்; எழிலரசி; |**அச்சிறுப்பாக்கம்**: தமிழ்ச்செல்வி; செல்வகுமாரி; விஷ்ணுபிரியா; சௌந்தர்யா கலை; ஜென்ஸி;| **மட்டக்கடை** : வளர்மதி சங்கர்; ஜாய்செல்வி; |**உடுமலைப்பேட்டை**: புஷ்பாமேரி; எட்வர்ட்; கிரேஸி ஜெயராமன்; |**கொத்திமங்கலம்**:

## போட்டி எண் : 10 (சரியான விடை எழுதியவர்கள்...)

பாக்யசெல்வகலா; D. உமா; உமா தேவஜோதி; | **திருச்சி**: புளோரா அருணா; மரியா; கிறிஸ்டி மகாலெஷ்மி; சாந்தி; |**பாளையங்கோட்டை**: கலா பிரசாத்; கௌரி; சாந்தகுமாரி; |**கோயம்புத்தூர்**: கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சிங்; எஸ்தர் விஜய்; நித்யா பெர்க்மான்ஸ்; ரெஜினாள் மாணிக்கம்; |**இளையரசனேந்தல்**: மெர்ஸி; ராஜராஜன்; டெய்சிராணி; |**மதுராந்தகம்**: சத்யா; புனிதா; ஷகிலா; ரேணுகா; |**நாகலாபுரம்**: சாராள்; லில்லி ஜெனட்தங்கம்; குளோரி; | **T.N.C.ஆலங்குளம்**: மரியாள்; ஸ்டெல்லா மேரி; |**இறச்சகுளம்**: ரேணுரூபன்; ராதிகா; ஜெஸ்மின்; |**நாகமலை**: விஜிலா; ஆனந்தி; கிளாடீஸ்; |**ஓசூர்**: ஜெமிந்தா; விஜயா; ஜோர்ன் ரிச்சர்டு; |**கொட்டிவாக்கம்**: அமுதவல்லி; எஸ்தர் விஜயராணி; | **குரோம்பேட்டை**: தாமரைசெல்வி; கோமதிகுமார்; | **கோவில்பட்டி**: மரியாள் ஜெயசீலி; ரேச்சல்; மேரி ஜெயா அனுஷியா; | **ஆலங்குளம் (வி)**: உமா ரோஸ்லின்; பிளாரன்ஸ்; | **மடத்துக்குளம்** : ஜெனிட்டா ஜூலியட் மேரி; சேர்மக்கனி; பரிமளா; ரூத்; | **சுரண்டை** : ஜெயமேரி; குளோரி ஞானம்; | **வடக்குஆத்தூர்**: மகேஸ்வரி; | **பாவூர்சத்திரம்**: ஜெசிலி; ஜூலி செல்வராஜ்; | **வேப்பம்பட்டு**: ஆர்த்தி; செல்வி அமலன்; | **ஆம்பூர்**: ரூபி மனோகரன்; கிரிஜா சத்யா; | **சேலம்**: பெட்ரீஷியா டேவிட்; ஜான்ஸிராணி**;** |**கடாட்சபுரம்**: சுசிலா; வசந்த வினோதினி; ரேவதி கில்பர்ட்; | **அன்புநகர்**: ஜெசி மெர்லின்; பிரின்சஸ் ரீனா; | **பரமத்திவேலூர்**: திருச்செல்வி; பாமா; | **ஆழ்வார்திருநகரி**: அமுதா; ஜான்சி; | **சென்னை** : மெர்லின் ஹெலன் பிரிதியா; தங்கராஜ்; | **கவரைப்பேட்டை**: தங்கம்; மணிமேகலை; | **வளசரவாக்கம்**: ஜெபசெல்வி தனராஜ்; பிரின்ஸ்; | **ஆழ்வார் திருநகரி**: பனிமலர்; | **இலுப்பையூரணி**: முனீஸ்வரி; | **கட்டப்பெட்டு**: புஸ்பமாலா; | **K.K.வலசை** : எஸ்தர்; | **உக்கிரன்கோட்டை**: குழந்தைதிரசம்மாள்;| **நாகலாபுரம்**: சுஜந்த்; | **தர்மபுரி: ஜாஸ்மின்** ஆ. மாதம்மாள்; | **நத்தக்கடையூர்** மோகனம்பால்; | **ஆலங்காயம்:** மோகனப்பிரியா; | **கள்ளக்குறிச்சி:** தங்கம் சாக்கோ; | **புதுக்கோட்டை**: கெர்லின் தாஸ்; | **பெரியகுளம்**: ஜேம்ஸ் மேரி; | **முத்தையாபுரம்**: பிரியா அகஸ்டின்; | **நாசரேத்**: எஸ்தர்; | **பழனி**: பிரிசில்லா யோவான்; சாந்தி; | **K.K. நகர்**: மேரிராஜ்; | **வடக்குக்கோணம்**: மரியநேசம்ராஜ்; | **கீழரசூர்:** வசந்தி; | **மதுரை** : கனகவல்லி; | **மேப்பேடு**: ஜான்சிராணி; | **புதுஆயக்குடி**: எஸ்தர்; | **கீழப்பழுவூர்**: ஆர்த்தி; | **மம்சாபுரம்**: சில்வியா விண்ணரசி; காட்வின்பால்; | **ஆண்டிபட்டி**: தேவபாக்கியம்; பூங்கொடி; | **நெய்யூர்:** ஷீலா ராபர்ட்; லிடியா; | **திருமுல்லைவாயல்**: ஷியாம் விஜி; | **திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; | **கூத்தாநல்லூர்**: S.A.Mபாஸ்டியன்; **ரெட் ஹில்ஸ்:**ஆஷா; | **கீழசீவல்பட்டி**: ராணி; | **புளியங்குடி:** சுந்தரி; | **வெள்ளக்கால்**: கலா; | **அரும்பாக்கம்:** மேரி; | **திருநெல்வேலி**: சந்திரா ஆல்பர்ட்; | **ஏர்வாடி**: மரகதம்;| **புதுசாம்பள்ளி**: பத்மினி; | **முக்கூடல்**: முத்துக்கிருஷ்ணன்; | **கல்லல்:** அபிஷாக்; | **பள்ளிக்கரணை**: பொன்செல்வி; | **மதுரவாயல்**: பிரசாந்தி; | **அரூர்**: சங்கீதா; | **மேல அனுப்பானடி**: ஷீலா ராஜேஷ்; அனிதா;| **விழுப்புரம்** : ஆரோன் அருண்குமார்; |**நாகப்பட்டினம்**: வின்சென்ட் ராஜ்;| **V.K.புரம்**: மேரிபுஷ்பராணி; | **வெளிப்பாளையம்**: கவிதா; |**கவுண்டம்பாளையம்**: இந்திராணி; |**K.P.வலசை**: சீலி; |**செங்கல்பட்டு**: சரண்யா மகாதேவன்;| **யாக்கோபுரம்:** பேபி ஷாலோம்; |**சாத்தூர்:** சரோஜா; **சிட்லபாக்கம்:** ரெபேக்காள்; |**தென்னம்பாளையம்**: ரோஸ்லின் சாந்தி; |**மூலைக்கரைப்பட்டி:** பிரியா; | **சீரநாயக்கன்பாளையம்:** ரத்தினம்; | **நிம்மியம்பட்டு**: உஷாராணி; | **நாகர்கோவில்**: ஏஞ்சலா சிரில்; | **மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; | **பழையகாயல்:** எலிசபெத்; | **கம்பம்**:ஜோதிமணி; கூடன்குளம்; ஜேனட்ரூபவதி; | **கல்லுக்குறி**: டால்டன்; |**வடசேரி**; கிறிஸ்டி; |**வெண்ணாம்பட்டி:** ரூத் சித்ரா**;** |**ஜலகண்டபுரம்**: கவிதா; |**அச்சரப்பாக்கம்**: ஷாலினி பாண்டியன்; | **தேவகோட்டை**: மேரி ராபின்;| **திருக்கலுக்குன்றம்**: வைஷாலி; |**ஆழ்வார்குறிச்சி:** ஹரிலீலா; | **அய்யப்பாக்கம்**: ; | **கிழக்கு அழகப்பபுரம்:** ஆசீர்வாதம்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -11
## (2 சாமுவேல்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. பிக்கிரியின் குமாரனாகிய இவன் யார்?
2. மந்திரியாயிருந்த இவன் யார்?
3. வயது சென்ற கிழவனாயிருந்தவன் யார்?
4. மகா தந்திரவாதியாக இருந்தவன் யார்?
5. தாவீதின் ஆலோசனைக்காரனாகிய இவன் யார்?
6. வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிற இவன் யார்?
7. ரூபவதியான பெண்ணாயிருந்த இவள் யார்?
8. செய்கையில் வல்லவனாயிருந்தவன் யார்?
9. இரண்டு காலும் முடமான இவன் யார்?
10. வெகு சௌந்தரவதியாயிருந்த இவள் யார்?
11. சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய இவன் யார்?
12. நான் எம்மாத்திரம் என் வீடும் எம்மாத்திரம் என்று சொன்னது யார்?
13. சீமேயாவின் குமாரனாகிய இவன் யார்?
14. கர்வாலிமரத்தின் நடுவிலே உயிரோடே தொங்கியவன் யார்?
15. தீருவின் ராஜாவாகிய இவன் யார்?
16. தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய இவன் யார்?
17. மரணமடையும் நாள் மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது யார்?
18. எப்படியாகிலும் நான் ஓடுவேன் என்றவன் யார்?
19. ஆனூனின் தகப்பனாகிய இவன் யார்?
20. சவுலுக்கு மறுமனையாட்டியாயிருந்த இவள் யார்
21. யோவாபின் சகோதரனும் செருயாவின் குமாரனாகிய இவன் யார்?
22. சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய இவன் யார்?
23. தாவீதுக்கு வெகு இன்பமாயிருந்தவன் யார்?
24. கர்த்தரின் நிமித்தம் யெதிதியா என்று பேரிட்டவன் யார்?
25. தாவீதின் சிநேகிதனாகிய இவன் யார்?

**குறிப்பு : விடை எழுதுபவர்கள்**
**உங்களுடைய பெயர், முகவரியை தெளிவாக எழுதவும்.**

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.06.2025



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## தமிழ் பிரதேசத்தின் மூலம் வடஇந்தியாவில் நடைபெற்ற குடும்ப முகாம்கள்









## AGVBS ஆசிரியர்கள் பயிற்சி–2025






## கர்த்தருக்குள் நித்திரையடைந்த Rev.P.S. ராஜமணி அவர்களுடைய அடக்க ஆராதனை (23.04.2025)









Registered News Paper Regd. No. 8206 / 62

## AGTBC பட்டமளிப்பு விழா–மதுரை









## திரித்துவ வேதாகமக் கல்லூரி பட்டமளிப்பு விழா–செங்கோட்டை









BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664